கண் வைத்திய நிபுணர்கள்
பொர்க செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 11 ஞாயிற்றுக்கிழமை (24 – 04 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 147

# பேச்சின் மூலமே தீர்வு யுத்தத்தினால் அல்ல!

## அமைச்சர் தயாரத்ன பகிரங்க அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 24

வடக்கு - கிழக்கு பிரச்சினையை யுத்தத்தின் மூலம் தீர்க்கமுடியாது; பேச்சுக்கள் மூலமே இப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டும்.

புனர் வாழ்வு; புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் பி; தயாரத்தினா இவ்வாறு பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்;

ஐ. தே. கவின் அம்பாறை மாவட்ட எம். பியும் அரசின் முக்கிய அமைச்சருமான தயாரத்ன இவ்வாறு பகிரங்கமாக அறிவித்திருப்பது அரசியல் [7ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



தாமுற கப்பல் டி. பி. என்டது உவர் தயாரத்னாவுக்கு விளங்கியிட்டுது போலை......!

# 12 ஆயிரம் துருப்புகள் கிழக்கிலிருந்து வடக்கிற்கு!

கொழும்பு, ஏப், 24

கிழக்கு மாகாணத்தில் இருந்து இதுவரை சுமார் 12 ஆயிரம் துருப்புகள் வாபஸ் பெறப்பட்டு வடக்குக்கு அனுப்பப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத் தலைமையக சிரேஷ்ட அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

'கஜபா', 'சிங்க', 'கெமுனு' 'லைற் இன்பான்றி' (Light Infantry) ஆகிய படைப் பிரிவுகளைச் சேர்ந்த ஏழு பட்டாலியன்களும் ஐந்து தொண்டர் படைப் பிரிவுகளும் விசேட இராணுவக் கொமாண்டோ பிரிவினரும் கிழக்கு மாகாணத்தில் இதுவரை கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்,

இவற்றில் ஆறு பட்டாலியன்களும் 3 தொண்டர் படைப் பிரிவுகளும் கிழக்கிலிருந்து ஏற்கனவே வாபஸ் பெறப்பட்டு விட்டன.

கிழக்கு மாகாணத்தில் இருந்து ஆயுதப் படையினரை விலக்கும் நடவடிக்கைகள் இரு வாரங்களுக்கு முன்னரேயே ஆரம்பிக்கப்பட்டு விட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது; [உ-எ]

## வவுனியாவில் படை குவிப்பு!

கொழும்பு, ஏப். 24

கிழக்கிலிருந்து வடக்கே துருப்புகளை இடமாற்றம் செய்யும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக—

வவுனியா பகுதியில் பெரும் எண்ணிக்கையில் படையினரும், யுத்த தளபாடங்களும் குவிக்கப்பட்டு வருவதாக வவுனியாவில் இருந்து கிடைத்த செய்திகளை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (உ-எ)

இராணுவம் வெளியேறிய

# கிழக்கு பகுதியின் பாதுகாப்பு அதிரடிப்படை, பொலீசாரிடம்

கொழும்பு, ஏப். 24

இராணுவம் வெளியேறிய கிழக்கின் கடற்கரைப் பகுதி மற்றும் காட்டுப் பகுதிகளின் பாதுகாப்பு விசேட அதிரடிப் படையினரிடமும் நகரப்பகுதிகளின் பாதுகாப்பு பொலீஸாரிடமும் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் சிவில் நிர்வாகம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்குடனும்—

வடக்கில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாகவுமே கிழக்கில் இருந்து ஆயுத படையினரை விலக்கிக் கொள்வதற்கு அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக கொழும்புப் பத்திரிகை செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

காமினிக்கு இடமளிக்க எவரும் தயாரில்லை

# டி.பிக்கு பணிந்து பதவி விலக ஐ.தே.க. எம்.பிக்கள் மறுப்பு

## ஜனாதிபதி கடும் சீற்றம்

கொழும்பு, ஏப். 24

காமினி திஸநாயக்காவை எம்.பியாக நியமிப்பதற்கு வழி செய்யுமுகமாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் எம். பிக்கள் எவரும் பதவி விலகத் தயாரில்லை என்று கூறிவிட்டனர் என்று—

இதனால் ஜனாதிபதி விஜேதுங்கா கடுங் கோபம் அடைந்துள்ளார் என்றும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் காரணமாக காமினியை எம். பியாக்க ஜனாதிபதி எடுத்து வந்த அனைத்து முயற்சிகளும் பூரணமாக ஸ்தம்பிதமடைந்து விட்டதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதன் காரணமாக எதிர்வரும் சில வாரங்களில் ஜனாதிபதி விஜேதுங்கா நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

தாம் நினைத்ததை தமது கட்சி எம். பிக்களைக் கொண்டு நிறைவேற்றும் ஆற்றல் படைத்தவரா முன்னாள் ஜனாதிபதி ... ( 8ஆம் பக்கம் பார்க்க )

## இரு போராளிகள் வீரச்சாவு

யாழ். மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

இரண்டாம் லெப்டினன்ட் இசையமுதன் அல்லது மனோஜ் (திரவியநாதன் ஜெகநதன் – மாவிட்டபுரம் வீதி, கீரிமலை), இரண்டாம் லெப்டினன்ட் வேலவன் அல்லது இளங்கோ, (இராசதுரை யோகராஜா— மட்டக்களப்பு) ஆகிய இருவருமே வீரச்சாவடைந்தவர்களாவர்.

மட்டக்களப்பு மாவட்டம் காண்டியடி. கஞ்சிரங்குடா என்னுமிடத்தில் கடந்த செவ்வாயன்று விசேட அதிரடிப் படையினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் கணபதிப்பிள்ளை சந்திரசேகரம் (ஆரையம்பதி) என்பவர் வீரச்சாவடைந்தார்.

இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை ஆவார். (உ-5)

# முஸ்லிம்களும் தமிழர்களும் சேர்ந்து பொதுவான தீர்வை முன்வைப்போம்

## தலைவர் பிரபாவுக்கு அஷ்ரப் பகிரங்க அழைப்பு

கொழும்பு, ஏப். 24

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு பகிரங்கக் கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார்.

அக்கடிதத்தில் ஜனாப் அஷ்ரப் தெரிவித்திருப்பதாவது;

வடக்கு - கிழக்கு பிரச்சினையின் தீர்வை ஏற்படுத்தும் முயற்சியில் தமிழர் சார்பில் ஒரு கோரிக்கையும் முஸ்லிம் சார்பில் ஒரு கோரிக்கையும் முன்வைக்கப்படும் வரை ஒருபோதும் வெற்றி கிடைக்கமாட்டாது.

தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பொதுவான ஒரு தீர்வை முன்வைப்பதற்கு இரு சமூகங்களின் தலைவர்களும் செயல்படவேண்டும்.

### எங்களை ஏமாற்றினர்

இந்த நாட்டை ஆட்சி செய்த சகல அரசியல் தலைவர்களும் தமிழ் மக்களையும் தமிழ்த் தலைவர்களையும் ஏமாற்றியுள்ளனர். தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் ஏமாற்றப்பட்டுள்ளன.

இன்றைய தலைவர்கள் கூட இனப்பிரச்சினையை தேசியப் பிரச்சினையாக அணுகாமல், ஒரு பயங்கரவாதப் பிரச்சினையாக உருவகப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

சிங்கள தலைமைத்துவம் தமிழ்த் தலைமைத்துவத்துடனும் முஸ்லிம் தலைமைத்துவத்துடனும் பேசவேண்டும்.

ஆனால் சிங்களத் தலைமைத்துவம் தமிழ், முஸ்லிம் (7 ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ நடவடிக்கை மன்னாரில் ஆரம்பம்?

மணிலா, ஏப். 24

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார் பிராந்தியத்தின் சில பகுதிகளை கைப்பற்ற படையினர் புதிய நடவடிக்கையை நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ளனர்.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'வெரித்தாஸ்' வானொலி இதனை வெளியிட்டது.

தமது இராணுவப் பாதுகாப்பு வலயத்தை இரண்டு கிலோ மீற்றர் தூரம் மேலும் அதிகரிக்கும் நோக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள செட்டிக்குளத்தில் இருந்து—

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் தாம் 2 கிலோ மீற்றர் தூரம் முன்னேறியிருப்பதாகவும் —

இராணுவத்தின் அந்த நடவடிக்கைக்கு விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் எதனையும் நடத்தவில்லை என்றும்-

செட்டிக் குளத்தில் இருந்து 16 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் கானரநலன் குளத்தைக் கைப்பற்றுவதே படையினரின் நோக்கம் என்றும் இராணுவ வட்டாரங்கள் கூறியதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

# கிழக்குப் பிராந்தியத்துக்கு புதிய இராணுவத் தளபதி

கொழும்பு ஏப். 24

கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் டபிள்யு.ஆர். விஜேரத்னா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பனாகொட இராணுவத் தலைமையக அதிகாரியாகக் கடமையாற்றியவர்.

மேஜர் ஜெனரல் லக்கி அல்கம இராணுவத்தின் பிரதம தலைமை அதிகாரியாக பதவி உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதி பதவி கடந்த இரண்டு மாதகாலமாக நிரப்பப்படாது இருந்து வந்தது. (உ-எ)

# ஏறாவூர் தாக்குதலில் பொலீஸார் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 24

ஏறாவூர் பொலீஸ் நிலையப் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது கடந்த செவ்வாயன்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பொலீஸார் ஒருவர் கொல்லப்பட்டார். இவர் காயங்களுடன் தப்பி ஓடினர்.

பொலீஸ் நிலையத்தில் இருந்து 150 யார் தொலைவில் உள்ள சோதனை நிலையத்தில் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

பொலீஸாரிடமிருந்து ரீ-56 ரக துப்பாக்கி ஒன்றையும் அதற்கான மகஸீன் மற்றும் 30 நடுத்தர ரவைகளையும் புலிகள் கைப்பற்றினர். (உ-5)

# அமைச்சர்கள் ஊழல் பற்றி விசாரித்ததில் இடமாற்றம்!

## லஞ்ச ஆணையாளருக்கு நேர்ந்த கதி

கொழும்பு, ஏப். 24

அமைச்சர்கள் விஜேபால மெண்டிஸ், சந்திர பண்டாரா, வீரசிங்க மல்லிமாராச்சி, முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா மற்றும் ரயில்வே பொது முகாமையாளர் ரெக்ஸ் சில்வா ஆகியோருக்கு எதிரான ஊழல் புகார்களை தீவிரமாக விசாரித்து வந்தார் என்ற ஒரே காரணத்துக்காகத்தான் திருமதி நெலும் கமகே லஞ்ச ஆணையாளர் பதவியில் இருந்து உடனடியாக அகற்றப்பட்டு வேறு பதவியில் நியமிக்கப்பட்டார் என்று இப்போது தகவல் வெளியாகி உள்ளது.

இவர்கள் மீதான விசாரணைகளை நிறுத்தும்படி அரசுத் தலைமை திருமதி கமகேயை கேட்டுக் கொண்டது என்றும் —

அதற்கு அவர் இணங்க மறுத்து விட்டார் என்றும்—

அதனைத் தொடர்ந்தே அவர் இடமாற்றஞ் செய்யப்பட்டதாகவும் 'ராவய' ஆசிரியர் விக்ரர் ஐவன் தெரிவித்தார்.

திருமதி கமகேயுடன் சேர்ந்து அவ்விசாரணைகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார் என்ற காரணத்துக்காகத்தான் உதவி லஞ்ச ஆணையாளர் விஜே ஹெட்டியாராச்சிக்கு பிரதி லஞ்ச ஆணையாளர் பதவி உயர்வு வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. [உ-எ-6]

அமைச்சரவைக்கு எதிராக

# வழக்கு தாக்கல் செய்ததால் கொலைப் பயமுறுத்தல்!

கொழும்பு, ஏப். 24

முழு அமைச்சரவை உறுப்பினர்களுக்கும் எதிராக அடிப்படை உரிமைமீறல் வழக்குத் தாக்கல் செய்து, ஒரு கோடி ரூபா நட்டஈடு கோரியுள்ள முன்னாள் உதவி லஞ்சஆணையாளர் விஜே ஹெட்டியாராச்சிக்கு கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மிரட்டல்களை அவனத் ... அவர் தாம் தாக்கல் செய்த ... நடத்த முடிவு செய்திருப்பதாகவும் —

அவரின் இந்த நடவடிக்கை இலங்கை அரசியல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாகும் என்று பி. பி. ஸிக்கு ராவய ஆசிரியர் விக்ரர் ஐவன் தெரிவித்தார்.

இக்கொலை மிரட்டல் குறித்து திரு. ஹெட்டியாராச்சி பொலீஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பகிரங்க அறிக்கை ஒன்றை விடுக்கவுள்ளதாக தெரிகிறது.

பாதுகாப்புத் தருமாறு கோரி

# காலையில் டி.பிக்கு செய்தி மாலையில் கொலையுண்டார்

## மரண விசாரணையில் தகவல்

கொழும்பு, ஏப். 24

தமக்கு பாதுகாப்பு வழங்குமாறு காரி ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு "பாக்ஸ்" மூலம் காலையில் செய்தி அனுப்பிய மாத்தளை மாநகர சபை ஐ தே. க. உறுப்பினர் ரஸ்மன் ஹுசேன் அன்று மாலையே கொலை செய்யப்பட்டார்.

ஹுசேனின் மரண விசாரணையில் இத்தகவல் வெளியாகியது.

மாத்தளை மாவட்ட நீதிவான் மேர்வின் விஜேதுங்கா முன்னிலையில் மரண விசாரணை நடத்தப்பட்டது.

மேல்விசாரணை அடுத்த மாதம் 23 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மாத்தளையில் ஐ. தே. கவின்

# மற்றொரு உறுப்பினருக்கும் கொலைப் பயமுறுத்தல்!

கொழும்பு, ஏப். 24

மாத்தளை மாநகர சபையின் இன்னொரு ஐ.தே.க. உறுப்பினருக்கும் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மொஹான் வீரக்கோன் என்ற அந்த உறுப்பினர் ஆகக் கூடிய பாதுகாப்பு தமக்கு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

புதிய கொலை மிரட்டல் ஏற்கனவே ஐ.தே.க, மாநகர சபை உறுப்பினரான ரஸ்மர் ஹுசேனின் கொலை பற்றிய விசாரணையில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

# வட மத்திய சபையில் கருத்து மோதல்கள்!

கொழும்பு, ஏப். 24

வடமத்திய மாகாண முதலமைச்சர் ஜி. டி. மகிந்தசோமாவுக்கும் அம்மாகாண ஆளுநர் இ. எல். சேனநாயக்காவுக்கும் இடையேயான கருத்து மோதல் தீவிரமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆளுநர் சேனநாயக்காவின் பதவிக்காலம் அடுத்த மாதம் 19ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

தம்மை மீண்டும் ஆளுநராக ஜனாதிபதி நியமிப்பின் தாம் பணிபுரியத் தயாராக இருப்பதாக திரு. சேனநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

ஆளுநர் தமது ஐந்தாண்டு பதவிக்காலத்தில் வடமத்திய மாகாணத்துக்கு 26 தடவைகளே விஜயம் செய்துள்ளார் என்று முதலமைச்சர் குற்றஞ்சாட்டியிருப்பதுடன், புதியவர் ஒருவரை ஜனாதிபதி ஆளுநராக நியமிக்கவேண்டும் என்றும் ஜனாதிபதியை கோரியிருக்கிறார்.

முதலமைச்சரின் இக்கூற்றை 'ஒரு பைத்தியக்காரனின் பேச்சு' என்று ஆளுநர் விமர்சித்திருக்கிறார்.

'அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் என் மீது வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வழக்கு முடிவடைந்ததும் நான் தகுந்த பதில் அளிப்பேன்'' — என்றும் ஆளுநர் கூறினார்.

தமமை ஆளுநர் பதவியில் இருந்து அகற்றும்படி மாகாண ( 8 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு குண்டு வெடிப்பு ஐ. தே. க. குழுவின் வேலை!

## சு. கவின் எம். பி. கூறுகிறார்

கொழும்பு ஏப். 24

அரசுத் தலைமைத்துவத்தை அச்சுறுத்துவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய குழு ஒன்று கொழும்பு ஹோட்டல் தொடர் குண்டு வெடிப்பின் பின்னணியில் செயற்பட்டு இருக்கிறது.

ஸ்ரீ ல. சு. கவின் நுவரெலியா மாவட்ட எம்பியான எஸ். பி. திஸநாயக்கா பி.பி. ஸிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் அவரது கட்சியில் உள்ள சில அணிகளுக்கும் இடையேயான பிணக்குகளே தொடர் குண்டு வெடிப்புக்குக் காரணமாக இருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா பிரதமராக இருந்தபோது சிறீ, ஜே. வி. பியினருடன் நெருங்கி உறவாடி, அன்றைய அரசுத் தலைமைக்குச் சவாலாக இருந்தது போன்று, விஜேதுங்காவுக்கு எதிராக அவரது கட்சியில் உள்ள சில அணிகள் இப்போது செயல்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தமிழக காங்கிரஸ் தலைமையகத்தில் மோதல்!

சென்னை, ஏப். 24

சென்னையில் இந்திரா காங்கிரஸ் தலைமையகமான சத்தியமூர்த்தி பவனில் நேற்று முன்தினம் இரு கோஷ்டிகளுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் அங்கு நின்ற கார்களும் மற்றும் உடைமைகளும் சேதமடைந்தன என அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக 18 பேர் கைதுசெய்யப்பட்டனர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வை

# ஸ்ரீமுத்துமாரி அம்மன் ரதோற்சவ சிறப்பிதழ்

24 - 04 - 1994

## ரதமூர்ந்து வரமருள் தாயே!

தாசிந்தான் மணக்வாழ் அருள்மிகு மகமாரி அன்னை இரதத்தில் ஆரோகணித்து வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். சித்திரா பூரணைக்கு முதனாள் சித்திரத் தேரேறிச் சித்திகள் பலவும், சிறந்த அடியவர்கள் பெற அருளாட்சி செய்யும் அன்னை மகமாரி இரதமூர்ந்து வரமளிக்க வேண்டுமெனப் பல்லாண்டு பாடி ஆசிகூற எனக்கருளுமாறு அன்னை அம்புய திருப்பொற்பாதங்களைப் பணிகின்றேன்.

அன்னைக்கு ஆசி கூறத்தகுதியுடையேனல்லேன். இரதோற்சவம் இனிது நிறைவேற எனது ஆசிகளும், நல்வாழ்த்துக்களுமுரியனாகுக.

சிவஸ்ரீ சோ., தண்டபாணிகதேசிகர்,
பிரதம குரு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்,
வல்வெட்டித்துறை.

சமாதான நீதிபதி, தலைவர் அகில இலங்கை —
சைவக்குருமார் அர்ச்சகர் சபை.

## பாரம் பரிய மரபு பேணி தினமும் தெய்வீகக் காட்சி

இந்து சமய வழிபாட்டு மரபுகள் பலவற்றிலும் எம் நாட்டில் கிட்டத்தட்ட எல்லா இந்துக்களாலும் அனுசரிக்கப்படும் தத்துவமாக, சைவசித்தாந்த தத்துவமாகும், இம் மரபிலே ஆன்மீக ஈடேற்றத்திற்குரிய படிமுறைகளில் ஆன்மாக்களால் அனுபவிக்கப்படும் தனு, கரண, புவன போகங்களுக்குக் காரணமாக சிவசக்தி உள்ளதாலேயே அவளால் வந்த ஆக்கம் இவ் வாழ்க்கை எல்லாம்'' என்று அருணந்தி சிவாசாரியார் அருளியுள்ளார் இம் மரபுக்கமைய இந் நாட்டின் முக்கிய சக்தி பீடங்களின் ஒன்றாகிய வல்வெட்டித் துறையில் முத்துமாரியாக லோகநாயகி அருள் பாலித்து வருகின்றார்.

1617ஆம் ஆண்டு தொடக்கம் பக்தர்கள் வழிபாட்டுவரும் இவ்வாலயத்தில் நவீனமயப்படுத்தப்பட்ட கோலவடிவங்களுக்கிடையேயும் பாரம்பரிய மரபு ஒன்று பேணப்படுவது சிறப்பம்சமாகும். கிராமிய மரபில் நன்கு பரிச்சயமான கலைஞர்களுடைய பின்னணி, உடுக்கு வாத்திய சகிதம், கையில் வேப்பிலை, பிரம்புடன் நடைபெறும் கரக ஆட்டம் அம்பிகையின் விழாக்காலத்தில் தினமும் காணக் கூடிய தெய்வீகக் காட்சியாகும்.

இவ்வருடமும் இன்றைய தினம் (24 04-94) இல் அம்பிகையின் திருக்குமாரர் சகிதம் தேர்மீது இவர்ந்து வந்து அருட்காட்சி கொடுக்கும் திவ்விய விழா நடைபெறவுள்ளது. அத் திருக்காட்சியை கண்டு இன்புறும் பேற்றை பக்தர்கள் அடைந்து தம் இஷ்ட சித்திகளைப் பெற கருணைக் கடலாம் அவள் தம் பொற்பாதங்களையே இறைஞ்சுவோமாக.

- ந· யோகசிகாமணி
நீதிபதி, யாழ்ப்பாணம்

## சித்திரதேரேறும் வல்வை முத்துமாரியின் முத்துப்புன்னகை முன்வினை தீர்க்கும்

அவன் அருளாலே அவன் தாழ் வணங்கி என மணிவாசகப் பெருமான் சிவபுராணத்திலே கூறியது நம்மெல்லோருக்கும் ஞாபகமாக இருக்கும் இறைவனை வணங்குவது என்பதும் அந்த இறைவனுடைய அருள், அனுக்கிரகம் இல்லாது நடைபெற முடியாத ஒன்றாகும். ஆகவே இறைவனை வழிபட கொடுத்து வைத்த பக்தர்கள் இந்நிலைக்கு வருவதற்கு அவர்கள் செய்த முற்பிறப்பு பயனே காரணம் ஆகும். முன் வினைப்பயன் இன்றி, முன்வினை அருளின்றி இப்பிறவியிலேயே எச்செயலும் நடைபெறமாட்டாது. ஒருவரது நற்செயலுக்கும் நல்வினைக்கும் அவரது எந்வினைக்கும் அவரது முற்பிறவிப் பயனே காரணமாக அமைகின்றது என்பதை உலகிற்கு எடுத்துக் கூறியது சனாதன தர்மமான இந்து மதமே.

இந்துக்களுடைய வழிபாட்டிலே ஜலநாதர், கங்காதேவி முத்துமாரி போன்ற தெய்வங்களை வழிபடும் முறையும் விநாயகரை பூசிக்கும் முறையும் ஜலக்கரையிலே வாழும் குடிகளது பூர்வீகமாகும். இந்த விதத்திலே வல்வைத் திருநகரிலே வாழும் மக்களும் அயல் கிராமத்தவரும் பெருமை கொள்ளும் விதத்தில் காசியிலே இருந்து கொணர்ந்து பிரதிஷ்டை செய்யப்பட்டு அருள்பாலிக்கும் வைத்தீஸ்வரப் பெருமானின் ஆலயம் வலது புறமாகவும், கோடிக் கரையிலே இருந்து வந்து வல்வைத் திருநகரிலே குடிகொண்டுள்ள வல்வை முத்துமாரி ஆலயம் இடது புறமாகவும் கிழக்கு எல்லையிலே பிரணவ வடிவாக வீற்றிருக்கும் நெடியகாட்டுப் பிள்ளையார் ஆலயமும் அமைந்துள்ளமை இறைவனை வழிபடுவதற்கென்றே பூர்வஜன்ம பலனின் அடிப்படையில் பாக்கியசாலிகளாக வல்வைவாழ் மக்களை ஆக்கியுள்ளது.

வல்வை வைத்தீஸ்வர ஆலயத்தினதும், முத்துமாரி அம்பாளினதும் நெடியகாட்டுப் பிள்ளையாரினதும் ராஜ கோபுரங்கள் வானைத் தொட்டு பக்திப்பரவசம் ஊட்டும் நிலையில் கம்பீரமாக காட்சி அளிப்பது 'சிவபுரம்' என அமிர்தானந்த சுவாமிகளினால் அழைக்கப்பட்ட வல்வைக்கு அழகு சேர்க்கின்றது.

காசியிலே இருந்து கந்த நூற்றாண்டிலே கொண்டு வரப்பட்ட சிவாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கத்தின் மூலஸ்தானத்திலே அதிகாலையிலே குறிப்பிட்ட காலத்திலே சூரிய ஒளிபட்டு சிவலிங்கம் அழகுற காட்சி தருவது கண்கொள்ளாக் காட்சி அது அந்த ஆலயத்தின் தனிச்சிறப்பாகும். ஆனி உத்தரத்திலும், மார்கழித் திருவாதிரையிலும் நடராஜப்பெருமான் எழுந்தருளி வீதியை வலம் வரும்போது பிரபஞ்ச தத்துவத்தை விளக்கும் ஆனந்த கூத்து ஆடி வரும் காட்சியை எங்கும் இது போலப் பார்த்ததில்லை என பக்தர்கள் கூறுவது விசேட அம்சமாகும்.

வல்வை முத்துமாரி அம்பாளினது கம்பீர தோற்றமும் அருள்பாலிக்கும் கருணை முகமும், எங்கிருந்து பார்த்தாலும் கனவு கொடுக்கும் முத்துப் புன்னகையும் ஒவ்வோர் பக்தர்கள் மனத்திலும் அகலாத பதிவு கொண்டுள்ளன. வல்வை வைத்தீஸ்வரன் நடராஜப் பெருமானின் கனிவு முகமும் வல்வை முத்துமாரியின் எழுந்தருளியினது அருட்புன்னகை தீர்க்கும் முகமும் பார்த்தால் அகங்களை குளிர வைக்கும் சிறப்பம்சம் கொண்டுள்ளதை பல பக்தர்கள் கண்டு மனம் நிறைந்து ஆனந்தமடைவது உண்டு.

இந்து சமுத்திரம், மத்திய தரைக்கடல், அத்திலாந்திக் சமுத்திரம் முதலிய பெரும் சமுத்திரங்களை பாய்க் கப்பலிலே கடந்து, புது உலகமான அமெரிக்கா வரை சென்ற ஈழத்தமிழர் வீரத்திலும், வாழ்விலும் ஆழமாக நின்று அருள்பாலித்தவள் முத்துமாரி. கடலைக் கிழித்து, அலைகடலைத் தாண்டி கப்பலிட்டு வேற்று நாட்டுடன் வர்த்தகம் செய்தாலும் தமிழர் வாழ்வின் கலாசாரம், பண்பாடு, சமய வளர்ச்சி, சமய எழுச்சி, ஆலய வழிபாடு முதலியவற்றுக்கு எப்போதும் வல்வை மக்களின் பங்கு பெரிதும் உண்டு. அதற்கு உயிர்நாடியாய் இருந்த முத்துமாரி அம்பாளின் வருடாந்த மகோற்சவம் சித்திரைப் பூரணையில் அம்பாள் சமுத்திர தீர்த்தமாடி பூர்த்தியாகும்.

அம்பாளின் திருவிழாவிலே வேட்டைத் திருவிழா, பூங்காவனத் திருவிழா, சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா முதலியவை எப்போதும் கலையம்சங்களையும் சமய சங்கீர்த்தனங்களையும் உள்ளத்தில் பதிய வைக்கக்கூடியவையாய் கொண்டாடப்படுகின்றன; 12ஆம் திருவிழாவிலே இடம்பெறும் "புலி விளையாட்டு" குழந்தைகளையும் பெரியோர்களையும் ஆனந்தமயமாக்கி விடும் நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கது.

பிள்ளையார், முருகன் தேர்கள் முன்னே செல்ல பக்தர்கள் ஆடியும் பாடியும் ஆர்ப்பரித்து மகிழ, அம்பாள் சித்திரத் தேரேறி வீதி உலா வரும்போது, அங்கப் பிரதிஷ்டை செய்பவர்கள் தேரின் பின்னே வர, பஜனை குழாம் பக்திப் பிரவாகத்தில் ஆடியும் பாடியும்வர, ஆண்களும், பெண்களும் அருள்வேண்டி நிற்கும் காட்சி அம்பாளின் எல்லையில்லாக் கருணையை பறைசாற்றும்.

எவ்வித இடர்பாடுகளுக்கு மத்தியிலும் அம்பாள் மக்களைக் காப்பாற்றி அனுக்கிரகம் புரிந்துள்ளதை தீர்த்தோற்சவ காலத்தில் கலந்து கொள்ளும் லட்சக்கணக்கான மக்கள் வியப்புறக் கதைப்பது எல்லோரும் அறிந்த விடயமாகும். வல்வைக்கே உரியபாணியில் தமது கைத்திறனில் வல்வை இளைஞர் "புகைக்கூண்டு"களை வானத்தின் அந்தரங்களுக்கு அனுப்பும் நிகழ்வினால் ஈழத்திலே உள்ள சிறுவர்களும் மறக்க முடியாத பெருவிழாவாக தீர்த்தோற்சவம் கருதப்படுகின்றது.

இம்முறை அமைதியான முறையிலே ஆனந்தமாக அம்பாள் கருணை வேண்டி மகோற்சவம் நடைபெறுவது வல்வை வாழ் மக்களுக்கும், தமிழ் கூறும் நல்லுலகிற்கும் அம்பாள் கருணை நிச்சயம் என்பதை பறைசாற்றுகின்றது. ★

க. சோ. சிவனருள் சுந்தரம்
(காண்டீபன்)
சட்டத்தரணி, வல்வெட்டித்துறை

## அன்னையின் திருஉலாக் காண திரண்டு வரும் பக்தர் கூட்டம்

வல்வைப் பெருநகரின் மத்தியிலே ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான் ஆலயத்தின் இடது புறத்திலே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் சித்திரத் தேரேறி வீதிவலம் வரும் இந்நாள் வல்வைப் பெருமக்களுக்கு ஒரு பொன் நாள். அன்னை தேர் மீது அமர்ந்து தனது பக்த கோடிகளுக்கு அளிக்கும் இத் தோற்றம் கண்கொள்ளாக் காட்சி ஆகும். அவள் காட்டும் அற்புதங்கள் எண்ணிலடங்கா!

தமிழ் நாட்டின் கோடிக்கரையிலிருந்து மூதாட்டியின் சேடியில் படகேறி வந்து வல்வைக் கரையில் இறங்கி கோயில்கொண்டருளிய அம்பிகையின் ஆலய உயர்ந்த வெய்யிலிலும் பக்திபூர்வமாக அங்கப் பிரதட்சிணம் செய்து வரும் காட்சி மெய்சிலிர்க்க வைக்கும்.

விழாக்காலங்களில் சமயச் சொற்பொழிவுகளும், தரமான இசை நிகழ்ச்சிகள், பஜனை ஆகியவையும் இடம் பெறுகின்றன. தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப்படுவதுடன் முடிந்த நாட்களில் அன்னதானமும் வழங்கப்படுகின்றது. பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற கரகம், பாற்குடம் ஆகியவற்றை ஏந்தி வருகின்றனர். தீமிதிப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன.

அன்னை தேரில் வலம்வந்ததும் பச்சை சாத்தியபின் தேரிலிருந்து இறங்கிவரும் காட்சி களுடன் நிறைகுடங்களும் வைக்கப்பட்டு வரவேற்கப்படுகின்றார்.

சோதனை மேல் சோதனை வந்தபோதும் முத்துமாரி அம்பாள் மீது ஊர் மக்கள் கொண்ட ஆழ்ந்த பக்தியின் காரணமாய் இன்றும் இவ்வுற்சவங்கள் வழமைபோல சிறப்புடன் நடைபெறுகின்றன. அத்தகைய பக்தியுடனும் அசையாத நம்பிக்கையுடனும் வாழும் அடியார்களுக்கு அன்னையின் அருள் என்றென்றும் கிடைப்பதாக!

இரா. திருஞானசுந்தரம்
தலைவர், ஆலய பரிபாலன சபை.

கோபுரத்துடன் அழகுறக் காட்சி தருகின்றது சித்திர மாதத்து பௌர்ணமி தினம் தீர்த்தோற்சவம் அமையும் வண்ணம் நடைபெறும் பதினைந்து நாள் உற்சவ காலத்தில இரவும் பகலும் அம்பாள் அலங்கரிக்கப்பட்டு அழகுற வீதிவலம்வரும் காட்சியினைக் காண வெளியூர்களிலுள்ள ஊர் மக்கள் மட்டுமன்றி வெளிநாடுகளிலிருந்தும் கூட வருகின்றார்களென்றால் அன்னையின் மகத்துவத்தை அளவிடமுடியுமா? நூற்றுக் கணக்கான பக்தர்கள் விரதமிருந்து அன்னை வீதிவலம் வருகையில் பொழுதும் மிக அற்புதம். பூம்புகாரிலே நடைபெறும் இந்திரவிழா போன்று இங்கும் தீர்த்த உற்சவதினம் இந்திரவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. அன்றைய தினம் ஊர் முழுவதும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்படுகின்றது. அம்பாள் தீர்த்தமாட எழுந்தருளும் வேளையில் பலவர்ண புகைக்கூண்டுகள் வானிலே விடப்படுகின்றன. தீர்த்த முடிவதும் வல்வைநெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயத்தில் தங்கியிருந்துஇரவு மீண்டும் எழுந்தருளி ஆலயம் திரும்புகின்றார். வரும் வழியில் கலை நிகழ்ச்சி

### தேர்த்திருவிழா விசேட நிகழ்ச்சி

மாலை 7.00 — இரவு 9.00 மணி வரை

பாட்டு:- சங்கீத கலா வித்தகர்
செல்வி. பிரசாந்தி ராமச்சந்திரன்

வயலின்:- சங்கீத வித்துவான்
திரு S. கேசவமூர்த்தி

மிருதங்கம்:- சங்கீத கலைவித்தகர்
[illegible]

கடம்:- சங்கீத வித்துவான்
திரு. [illegible]

மலர் அமைப்பு
ம.சங்கரகாந்திலிங்கம்
(யாழ். மாவட்ட சமாதான நீதிபதி)




சகல விதமான எரிபொருள்களும் மொத்தமாகவும் எந்த நேரமும் பெற்றுக் கொள்வதற்கு நாடுங்கள்
உங்களின் நன்மதிப்புப் பெற்ற
நல்லாயன் எரிபொருள் விற்பனை நிலையம்
பருத்தித்துறை வீதி, வல்வெட்டித்துறை.

முத்துமாரித் தாயே! தேரேறி வந்து தீவினை தீர்த்து நல்லருள் தருவாய்!!
வல்வினைகள் தீர்த்து வளமுடன் வாழ வரம் அருள்வாய் வல்வை முத்துமாரி அம்மா
அழகு சாதனங்கள், அலங்கார பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் ஆகியன நியாய விலையில் பெற்றுக் கொள்ள
'டிசல்வி'
அழகு சாதன விற்பனை நிலையம்
வல்வெட்டித்துறை.

தாயே மகமாரி, தேரேறி வாரீர் அருள் தாரீர்!!
வல்வை புடைவை மாளிகை
சகலவித புடைவை வகைகளுக்கும் மற்றும் தரம்மிக்க அழகு சாதனப் பொருள்களுக்கும் வல்வையில் பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்

SPECIAL ENGLISH
விசேட ஆங்கில சேவை
தேரேறித் திக்கெல்லாம் நல்லருள் சுரக்கும் சகல கலா வல்லியே மகமாரி வருக! வருக!
சிறந்த சர்வதேச ஆங்கிலக் கல்வி திறம்படக் கற்க முன்னேற நாடுங்கள்
★ தரம்மிக்க ஆங்கில தமிழ் மொழிபெயர்ப்புக்கு உடன் நாடவும்
★ சகல வித அரச தனிப்பட்ட கடித முறைகளுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்
ம. சங்கரகாந்திலிங்கர்,
ஓய்வுபெற்ற அதிபரும் அரச மொழி பெயர்ப்பாளரும்

"கீருஷிகா ஆடை அகம்"
சகல வித பட்டு, பருத்தி ஆடைகளும் பெற்றுக் கொள்ளுமிடம்
ஆடை மாளிகை
நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்

சகல கலா வல்லியே மகமாரி முத்து மாரி நல்லருள் தருவாய்
ரிஷி ஆடை மாளிகை
யாழ்வீதி, வல்வெட்டித்துறை.

வல்வை மக்களையும் இந்நாட்டு மக்களையும் நலத்துடன் வாழ வழிவகுத்து அருள் புரிய தேரேறிப் பவனி வரும் வல்வை முத்து மாரி அம்பாளே உன்பதம் சரணம் அம்மா!
கணபதி மின் அமைப்பாளர்கள்
நெடியகாடு, வல்வெட்டித்துறை.

அருள் தருவாய் அம்பாள் முத்துமாரி தாயே தேரேறி வருக! வருக!
"அம்பாள் மின்னமைப்பு"
வல்வெட்டித்துறை

தேரேறி வருக! தாயே மகமாரி தாயே!!
R. V. G. (ஆர் வி ஜீ) மெடிக்கல்ஸ்
யாழ்ப்பாணம்.

மகமாரி தாயே! நல்லருள் தருவாயே!
R. V. G. (ஆர்.வி.ஜீ.) பீடிகள்
யாழ்ப்பாணம்.

நல்லருள் சுரக்கும் தாயே முத்துமாரி வருக!
ராஜு ஸ்ரோஸ்
யாழ்ப்பாணம்.
RAJU STORES
JAFFNA.

அருள் தருவாய் அம்பாள் மகமாரி வருக!
ஞானம்ஸ் ஆடை மாளிகை
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
GNANAM'S TEXTILES,
18A, MODERN MARKET, JAFFNA.

அன்புத் தாயே மகாமாரி வருக! அருள் தருவாய்!
ரவிராஜ் ஆடை மாளிகை
பெரிய கடை, யாழ்ப்பாணம்.
RAVIRAJ SILKS. GRANDBAZAAR, JAFFNA.

அருள் தருவாய் அன்புத்தாயே மகமாரி முத்துமாரி வருக!
சுகுணாஸ் ஆடை மாளிகை
29, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(உட்புறம்)

கோடி மாரி தாயே! முத்துமாரி வருக!
சகல வித பட்டு, பருத்தி ஆடைகளும் பெற்றுக் கொள்ளலாம்
ஐயப்பன் ஆடை மாளிகை
பிரதான வீதி, வல்வெட்டித்துறை.


## ஆலயங்களில்

நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா இன்று காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகும். வசந்த மண்டபப்பூசை 7.3 மணிக்குத் தொடங்கி விநாயகர் பெருமான் 9 மணிக்கு தேரில் ஆரோகணித்து வீதியுலாவுக்கு எழுந்தருளுவார். (அ)

★ ★ ★

தெல்லிப்பழை ஸ்ரீ காசி விநாயகர் கோயிலின் வருடாந்த மகோற்சவம் இன்று காலை 11 மணிக்கு காடியேற்றத்துடன் ஆரம்பமாகும். (க 89)

★ ★ ★

சுன்னாகம் குரா வத்தை ஸ்ரீ சிவபூதராயர் கோயில் தேர்த் திருவிழா இன்று காலை நடைபெறும். (ச-89)

★ ★ ★

சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் தேர்த்திருவிழாவை முன்னிட்டு சுன்னாகம் பகவான் சத்திய சாயி பஜனை நிலையத்தின் விசேட பஜனை காலை 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும் (க-89)

★ ★ ★

தெல்லிப்பழை கோவிற்புலம் அருணமார் (சிவன்) ஆலயத்தில் சித்திரைப் பூரணை விழாவை ஒட்டி இன்று திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு விஷேட அபிஷேகப் பூசையும், சுவாமி வெளி வீதிவலம் வருதலும், நண்பகல் 12.00 மணிக்கு அன்னதானப் பூசையும். சித்திரைக் கஞ்சி வார்ப்பும் நடைபெறும். (அ)

★ ★ ★

நாளை சித்திரா பூரணை தினத்தை ஒட்டி சகல சைவ ஆலயங்களிலும் சித்திரபுத்திரனார் படிப்பும் சித்திரைக் கஞ்சி வார்ப்பும் நடைபெறும் வழக்கம்பரை அம்பாள் ஆலயத்தில் மாலை பூரணைத் திருவிழாவும் அம்பாள் வீதியுலாவும் நடைபெறும். (ச-28)

★ ★ ★

வண்ணார்பண்ணை ஸ்ரீ முத்து மாரியம்மன் தேவஸ்தானத்தில் நாளை சித்திரைப் பௌர்ணமி விழா உற்சவம் நடைபெறும்.

விழாவை முன்னிட்டு காலை 5 மணிக்கும், மாலை 4 மணிக்கும் விஷேட பூசையும் அதனைத் தொடர்ந்து சுமங்கலி பூசையும் நடைபெறும். (சு-15)

நாளை பகல் 12 மணிக்கு தொல்புரம் மத்தி ஸ்ரீ ஆதி முத்து மாரியம்பாள் கோயில் புதிய சகடைத் தேர் வெள்ளோட்டம் நடைபெறும். (--28)

★ ★ ★

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா இன்று காலை 8 30 மணியளவில் நடைபெறும். தீர்த்தத் திருவிழா நாளை காலை இடம் பெறும். (க)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் கோயிலில் நேற்று முதல் ஆரம்பமாகி நடைபெற்று வரும் லட்சார்ச்சனையின் போது திரு. செ. சத்தியமூர்த்தியின் மகாபாரதம் தொடர் விரிவுரை இடம்பெறுகின்றது (த

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்தில் சித்திரை பூரணை தினமான நாளை நண்பகல் 12 மணிக்கு சித்திரைக் கஞ்சி வார்க்கும் வைபவம் இடம் பெறும். (த-17)

★ ★ ★

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் கோயில். வட்டுக்கோட்டை அலம்பலம் தோட்ட சந்தசாமி கோயில் ஆகியவற்றின் தேர்த் திருவிழா நடைபெறும். (க-28)

★ ★ ★

பருத்தித்துறை கோட்டுவாசல் சண்டிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தில் இன்று தேர்த் திருவிழாவும், நாளை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க)

★ ★ ★

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தில் நாளை காலை 9 மணிக்கு ரதோற்சவம் நடைபெறும்.

மாலை 4 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், 27 ஆம் திகதி புதன்கிழமை மாலை பூங்காவனமும் நடைபெறும். (க-51)

★ ★ ★

யாழ். வண்ணை, குளக்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் நாகம்மாள் கோயில்) தேவஸ்தானத்தில் இன்று காலை 10 மணிக்கு ரதோற்சவம் நடைபெறும்.

நாளை தீர்த்தமும், மறுதினம் பூங்காவனமும் நடைபெறும். (க-51)

[7 ஆம் பக்கமும் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வண்ணை - ஸ்ரீ காமாட்சி அம்பாள் [நாச்சிமார் கோயில்]

## ரதோற்சவ மலர்

### 24 - 04 - 1994

## தர்மகர்த்தாசபைத் தலைவர் செய்தி

எல்லாம் வல்ல சக்தியாகிய வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாளின் திருவருளால் வழமை போல் இவ்வருடமும் மிகவும் சிறப்பாக நடைபெறும் மகோற்சவத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட சித்திரத் திருமஞ்சத்தில் காட்சி கொடுத்து மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியில் மூழ்கி இருக்கும் இவ்வேளையில் இன்று அம்பாள் சித்திரத் தேரில் பவனிவரும் காட்சியை பக்தகோடிகள் கண்டு ஆனந்தித்து அம்பாளின் திருவருளை பெற்று உய்ய எமது தர்மகர்த்தா சபையின் சார்பில் எல்லாம் வல்ல ஸ்ரீ காமாட்சி அம்பாளை பிரார்த்திக்கிறேன்.

- விஸ்வப்பிரம்மஸ்ரீ சு. கந்தசாமி
தேவஸ்தான தர்மகர்த்தா

# இகபர சுகம் தரவல்ல அன்னை காமாட்சி வழிபாடு

அம்பிகையைச் சரணடைந்தால் அனைத்து வரம் பெறலாம். எங்கெங்கு காணினும் சக்தியடா அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம் பொருளாம் சிவம் தொழிற்படுவது சக்தியினாலன்றோ. எனவே தான் சைவ சமயத்தில் "சக்தியின்றிச் சிவமில்லை" என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது. சிவமாகிய பொருளை அசைய வைப்பது சக்தியே என்பது சைவ முடிபு. எனவே

பரம் பொருளின் அசைவியக்கமாகிய சக்தியைப் போற்றிப் பரவுவது நமது தலையாய கடனாகும்.

'ஓர் நாமம் ஒருருவும் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டோமோ' உருவற்ற பெயரற்ற ஒரு பொருளை உருவப் பொருளாக பெயர்ப் பொருளாக ஆக்கும் ஆற்றல் தான் பராசக்தி. எனவே அன்னை வழிபாடு மனிதர்களாகிய எம் போன்றோர்கள்

### விஸ்வகுல மக்கள் வழிபடும் திருத்தலம்

ஆற்றப்பட வேண்டியது அவசியமானதொன்றாகும்.



பிரபஞ்ச ஒழுங்கை நடத்திச் செல்லும் வல்லமையாம் சக்தியின் அருள் நலம் இகபர சுகமனைத்தையும் தரவல்லது. சக்தி வழிபாடானது பொதுமக்களிடையே அன்னை வழிபாடு, அம்மை வழிபாடு, அம்மன் வழிபாடு, ஈஸ்வரி வழிபாடு எனப் பல பெயர்களில் வழங்கப்படுகின்றது. அம்பிகையை அகிலாண்டேஸ்வரி என அழைக்கப்படுவதற்கேற்ற முறையில் அகிலமெங்கும் இவ் வழிபாடு பரந்து விளங்குகின்றது.

வேட்டையாடிப் பிழைத்த வேட்டுவச் சமுதாயத்திலிருந்து புராதன உழவுத் தொழில் தோன்றிய காலம் முதல் இயந்திர ஆட்டங்கண்டு பிழைக்கும் இன்றைய நவநாகரிக காலம் வரை மனிதன் அன்னையை வழிபாடியற்றி வந்துள்ளமையை வர

-திருமதி நாச்சிமார்
செல்வநாயகம் -

லாற்று ஆதாரங்கள் மூலம் அறிய முடிகின்றது. அன்னை புகழ்பாடி நாமும் வளம் பெறுவோமாக.

★

## சித்திரத் திருமஞ்சம்

ஸ்ரீ காமாக்ஷி அம்பிகைக்கு மூன்று வாசல்களுடன் கூடிய திருமஞ்சம் நிர்மாணிக்கப்பட வேண்டுமென அம்பிகை அடியார்களின் நீண்டகால அபிலாசை பூர்த்தியாகி வெள்ளோட்ட விழாவும் இவ்வருட மகோற்சவ காலத்தில் நடைபெற்று விநாயகர் சுப்பிரமணியர் சமேதராய் அம்பிகை அழகிய திருமஞ்சத்தில் ஆரோகணித்து பவனி வந்து பக்தகோடிகளுக்கு காட்சி தந்து இஷ்ட சித்திகளைத் தந்தருளினார். அந்த அரும்பெரும் காட்சிகளை கண்ணுற்ற நாம் அனைவரும் புண்ணிய சீலர்களானோம்.

திருமஞ்சத்தின் நிர்மாணப் பணிகள் யாவும் சிற்பச்சக்கரவர்த்தி ஸ்தபதி திரு ஆறுமுகம் சிவரத்தினம் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் அவர்களின் குழுவினரின் கைவண்ணத்தில் உருவாகி உள்ளது. பஞ்சப்பிரமார்களின் ஒருங்கு இணைந்த கைத்திறனில் உருவாகியது தான் இந்தக் கலைப் பொக்கிஷம். அம்பிகையின் பல சிற்பங்கள் சித்தரிக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. அம்பிகையின் சாரதியாக விஸ்வப் பிரம்மணியின் உருவ அமைப்பு சிறப்பு அம்சமாக அமைந்துள்ளது.

அத்துடன் சிற்பாசாரியார் திரு. செ. விக்னேஸ்வரநாதன் அவர்களின் கைத்திறனில் உருவாகிய விஸ்வப் பிரமாவின் பஞ்சமுக திருவுருவமும் அத்துடன் பஞ்சப் பிரமர்களின் தொழிற்பாடுகளை பிரதிபலிக்கும் சிற்பங்கள் ஐந்து தனித்தனியாக தத்துவார்த்தமாக உருவாக்கியுள்ளார்கள். சிற்பக்கலா வல்லுனர்கள் மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால் தான் அதன் தத்துவங்கள் விளங்கும்.

மற்றும் கலை நுட்பங்களை எழுத்தில் வர்ணிக்க முடியாது. நேரில் பார்த்தால் தான் விளங்கும்.

பஞ்சப் பிரமர்களின் கலைவண்ணம் ஓங்குக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!

க. வி. இராசரெத்தினம்

மலரமைப்பு.
த. பரமலிங்கம்

## ஆலய பிரதமகுருக்களின் செய்தி

காமாக்ஷி தோத்திரம்

காஞ்சி நூபுர ரத்தினகங்கண லஸத்
கேயூர ஹாரோஜ்வலாம்
காஸ்மீராருண கஞ்சுகாஞ்சித குசாம்
கஸ்தூரிகா சர்சிதாம்
கல்ஹாராஞ்சித கல்ப கோஜ்வலமுகீம்
காருண்ய கல்லோலினீம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சீபுரீ தேவதாம்.

உலக மாதாவாகிய அன்னை ஆதிபராசக்தியானவள் வண்ணை குளங்கரை மருதடியில் "ஸ்ரீ காமாக்ஷி" என்னும் திருநாமத்துடன் எழுந்தருளி தன்னை வழிபடும் அடியார்களின் இன்னல் தீர்த்து இன்னருள் புரிகிறாள். காமாட்சி என்றால் கருணைக் கண்ணை உடையவள் என்பது அர்த்தம்.

தாயிடம் கேட்டுப் பெறமுடியாதது எதுவுமில்லை. அழுக்கு நீங்கி ஆணவ இருள் விலகி ஒளி மயமான வாழ்வு மலர அன்னை காமாட்சி அருள்வாளாக!

அழகுக்கு அழகு கூட்டும் ஆபரணத் தொழிலாளர் தம் அளப்பரிய அரும்பணியால் அழகுற மிளிரும் அம்பிகையின் அருளாலயம் மென்மேலும் அருட்பொலிவோடு அதிசிறந்து விளங்க வேண்டுமென்று அருளாசி கூறி அமைகின்றேன்.

கிரியாகலாபமணி
சிவஸ்ரீ பா. பஞ்சாட்சரக் குருக்கள்
வண்ணை, ஸ்ரீ காமாட்சி அம்பாள்
தேவஸ்தானம்.

## முன்னாள் தர்மகர்த்தா செய்தி

சைவ மக்களாகிய எமக்கு ஆலய வழிபாடு மிகவும் அவசியம். ஆலய வழிபாட்டை முறையாகச் செய்து வருபவர்கள் சிறந்த ஆன்மபலத்தைப் பெறுகின்றனர். மகோற்சவம் தான் இறைவனுடைய பஞ்சகிருத்தியங்கள் (5 தொழில்கள்) என்று சாத்திரங்கள் கூறுகின்றன. அவை படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்பனவாகும்.

இவற்றில் இரதோற்சவம் அழித்தல் தொழிலைக் குறிக்கும். பூமியைத் தேராகவும் சந்திர சூரியரைச் சில்லுகளாகவும் வேதங்களை குதிரையாகவும் பிரமாவை தேர்ப்பாகனாகவும் கொண்டு முப்புரங்களையும் தகனம் செய்து மூன்று அசுரர்களையும் சங்காரம் செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

ஸ்ரீ காமாட்சி அம்பாள் சித்திரத்தேரேறி பவனிவரும் காட்சியை காணக் கிடைப்பதும் நாம் அனைவரும் செய்த பெரும் புண்ணியமே ஆகும். அம்பாளின் பூரண கிருபா கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்!

[illegible] ஸ்ரீ [illegible] கந்தசாமி


அம்பாள் தேரேறி வரும் இந்நாளில் தமிழீழம் விடியும்!

நியூலக்கி ஸ்டார் ஜுவல்லறி
229 ஏ, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ரவி மோட்டோர்ஸ்
245, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வையகம்
774, கே. கே. எஸ். வீதி,
தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம்.

சரஸ்வதி மிருதங்க இசைக்கல்லூரி
ஸ்ரீ ரகுராம ஜெயம்,
2, நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

கிருபா நகை மாளிகை
333A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஷகி சலூன்
லேடிஸ் அன் ஜென்ஸ்
596, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

ஆனந்தா மோட்டார் ஸ்ரோர்ஸ்
177, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

மங்களம் அழகு சாதன நிலையம்
770, தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்; நா. பாலபாஸ்கரன்

யாழ். உலர் சலவை அகம்
644, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

கந்தையா நாகராசா
அப்பிள் விற்பனை முகவர்
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

பேபி போட்டோ
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி,
திருநெல்வேலி.

சங்கீதா நகை மாளிகை
198A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சரவணமுத்து கந்தசாமி அன் சன்ஸ்
நகை தொழிற்சாலை
947, கே. கே. எஸ். வீதி,
தட்டாதெரு, யாழ்நகர்.

வெல்கம் சேல்ஸ் சென்ரர்
978, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,

வேலாயுதபிள்ளை அன் சன்ஸ்
960, கே. கே. எஸ். வீதி
நாச்சிமார் கோயிலடி.

கிருஷ்ணபிள்ளை அன் சன்ஸ்
591, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,

தமிழினம் இனி பாவம் போக தேரேறி வருநும்மா
★★★★★★ ★★★★★★

சன்ஸ்ரார் ஜுவல்லறி
147B [837] கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

குறிஞ்சி மெடிக்கல்ஸ் அன் குறோசறீஸ்
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

பெஷன் ஹவுஸ்
65, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

மினி ரேட் சென்ரர்
1008, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி

புனிதா நகை மாளிகை
இல. 239, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வின்ஸர் வெதுப்பகம்
சகதேநீர்ச் சாலை
இல. 178, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மகாலட்சுமி நகை மாடம்
213 அ, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ராஜா கிறீம் ஹவுஸ்
36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

ஞானம் புத்தக நிலையம்
635 கே. கே. எஸ். வீதி
நாச்சிமார் கோவிலடி.

வீடியோ எக்கனோமி
303, பலாலி வீதி,
திருநெல்வேலி.
உரிமையாளர்: ஆறுமுகம் ரமேஷ்

காமாட்சி அன்னை தேரேறி வந்து அருள் பாலிப்பாளாக!

லிங்கம் கூல் பார் அன் கபே
52, வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோயில்) ரதோற்சவ மலர்


அம்பாள் தேரேறி வரும் இந்நாளில் தமிழீழம் விடிக!

**சோபிகா நகை மாளிகை**
111, 1/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**லலிதா நகை மாளிகை**
213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சிறி அமலா நகை மாளிகை**
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**அம்பிகாபதி பான்ஸி ரேடர்ஸ்**
9ஏ, நவீன சந்தை
உட்புறம்
யாழ்ப்பாணம்.

**சிந்துஜா அரைக்கும் ஆலை**
962, கே. கே. எஸ். வீதி,
நச்சிமார் கோயிலடி.


## அன்னையைச் சரணடைவோம்!

அகில லோக ஜனனியாகி ஆதிபராசக்தி எல்லாச் சீவ ராசிகட்கும் அன்னையவள் தாயிடத்தில் குழந்தை போக வேண்டுமென்பதற்கு விதி விலக்கில்லை. அன்னை காமாட்சியைப் பூசிப்பதற்கு மனம் உருகிய அன்பு ஒன்றே போதுமானது. பிள்ளையின் தேவையைத் தாய்தான் அறிவாள். அத்தகைய அன்னையை அருளொழுகும் வர்ணத் தேரில் கண்டு வழிபடக் கிடைத்த புனித நாள் இன்றாகும். நாச்சிமார் கோயிலடி என்பதே தெய்வீகத் திருநாமம் ஆகும். இங்கு எழுந்தளிக்காட்சி கொடுக்கும் அம்பாள் போகத்தை நல்குபவள் அப்பனை வழிபட்டு அர்ச்சித்து ஆன்ம கோடிகளுக்காக இரங்கி நின்றவள்.

அம்பாளின் கருணை எல்லோருக்கும் வாய்ப்பாக வேண்டும். இவ்வுலகில் சஞ்சலமே தோன்றாது என்பது அனுபவ வாக்காகும்.

தேவியானவள் இன்று வேண்டுவார் வேண்டுவதை இல்லையெனாது வாரிவழங்கிக் கொண்டிருக்கின்றாள்; எத்துன்பம் எம்மை எதிர்நோக்கினும் அன்னையைச் சரணடைந்தால் சாந்தி கிட்டும்.

இன்று காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று இறைவி அகிலாண்ட கோடிப் பிரமாண்டங்களின் நாயகியாகிய ஸ்ரீகாமாட்சி அம்பிகை, விநாயகர், பால சுப்பிரமணியர் சண்டேஸ்வரி புடைசூழ வீதி வலமாய் எழுந்தருளி பக்த கோடி

[6 ஆம் பக்கம் பார்க்க]

மலர் ஏற்பாடு:
ச. நந்தகோபால்

### தங்க ரதமேறி தாயவள் வருகிறாள்

எழில் பொங்கும் ஈழத்தின் அருள்மிகு அன்னை
காமாட்சியே!
தொழில் கொள்ளும் விஸ்வப்பிரம்ம குலம் –
தொழுதேத்தும் தேவியே!
பொழில் சூழ்ந்த குளக்கரையில் எழிற்கோயில் –
கொண்ட தாயே!
அருள் தந்தே எம்மை வாழ்விக்கத் தேரேறி –
வருவாயம்மா!
தங்க நிறச் சுந்தரியாய் தமிழ் விஞ்சும் அம்பிகையாய்
குங்குமப் பொட்டோடு குமிண் சிரிப்போடு
பங்கயத்தில் எழுந்தருளும் வண்ணைநகர் காமாட்சி
எங்கள் துயர் தீர்க்க தங்கரதமேறி தாயவள் –
வருகின்றாள்.

— கவிஞர் காரை. எம். பி. அருளானந்தன்,


**சோ. கனகராசா**
இரும்புத் தொழிற்சாலை
660, கே. கே. எஸ். வீதி
நாச்சிமார் கோயிலடி.

**குமாரசாமி தேநீர்க்கடை**
175, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி.

அம்பாள் தேரேறி வரும் நாளில் தமிழீழம் விடிக!

**மைதிலி ஜுவல்லர்**
190 ஏ, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**நியூலலிதா ஜுவல்லர்ஸ்**
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**கரன் வர்த்தக நிலையம்**
772, காங்கேசன்துறை வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

**சாந்தி அச்சகம்**
575, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

**விக்கினேஸ்வரன் ஸ்ரோர்ஸ்**
(பலசரக்கு வியாபாரம்)
1026, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி.

தேரேறி வரும் காமாட்சி அம்பாளின் அருள் பெற்றுய்வோமாக!

★ **ரூபி நகை மாளிகை** ★

111/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



வெளிவந்துவிட்டது ■
விற்பனையாகின்றது
ஆங்கில உதவி ஆசிரியர் பரீட்சைக்கான வழிகாட்டி
**ENGLISH TEACHERS EXAM GUIDE**
8 வருடங்கள் நடைபெற்ற பரீட்சை வினா - விடைகள்
(எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்)
வெளியீடு: அன்ரன் பதிப்பகம்
[சி-8008]


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 5 – 08 – 1922



மறைவு: 26 – 03 – 1994

### அமரர் இ. விஜயசுந்தரம்

திதி: 24 - 04 - 1994
(மானிப்பாய்)

பூவினும் மென்மையன் புவியினும் பொறுமையன்
நானிலத் தூயன் நாட்டுக்கு நல்லோன்
நல்லோர் நட்பை நாளும் காப்பவன்
அல்லோர் உறவை அணுகவும் மாட்டான்
மற்றோர் குற்றம் மனதிற் கொள்ளான்
சுற்றத் தோர்தமைப் பற்றி வாழ்வான்
பெரியோர் தம்மைப் புகழ மறப்பினும்
சிறியோர் தம்மை இகழவே மாட்டான்
தேட்டம் ஒன்றையே நோக்காய்க் கொண்டு
நாட்டின் நலனுக் கிடராய் வாழான்
கல்வி கற்று ஆங்கிலர் ஆட்சியில்
நல்ல இராணுவ சேவையிற் சேர்ந்து
மெல்லைத நீக்குப் பின்னரச பதவியாம்
சுகாதார ணிக்கு துணிவு கொண்டு
தொழுநோய்த் துறையில் சேவை தொடர்ந்து
வரினும் கருணை கொண்டு அரச
சேவை அமர்ந்து அமரராயினனெம்
விஜயசுந்தரனே!

மனைவி மக்கள்,
மருமக்கள் பேரர்.

"சங்கவில்லா"
128, யாழ். வீதி,
மானிப்பாய்.
[30514]


# A/L 96

பிரிவு II
ஆரம்பம்: 30 - 04 - 1994
(காலை 7-00 மணி)

| | |
|---|---|
| பொருளியல் | — மகேந்திரன் |
| கணக்கியல் | — SAM |
| வர்த்தகம் | — தேவா |
| அளவையியல் | — சோதிலிங்கம் |
| தமிழ் | — குழந்தை |
| புவியியல் | — குணராஜா |
| இந்துநாகரிகம் | — அருள்நங்கை |
| அரசியல் | — கியூபேட் |
| இந்து சமயம் | — அருள்நங்கை, இசிதரன் |
| வரலாறு | — சிறிதரன் |
| கிறிஸ்தவம் | — அருட் சகோதரர் |
| நாடகமும் அரங்கியலும் | — மோசேஸ் |

அனுமதிகள் 23 - 04 - 94 முதல் வழங்கப்படுகின்றன. உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

**புதிய உயர் கல்லூரி**
ஆரிய குளம் சந்தி யாழ்ப்பாணம்
[சி/8034)


## திரும்பி வரவில்லை

### திரு. செல்லத்துரை மகாலிங்கம்

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி 57/17, இலக்கத்தில் வசிக்கும் செல்லத்துரை மகாலிங்கம், வயது 68, 26-03-94 அன்று அக்கராயன் குளத்திற்கு தனது வயல்களைப் (இல: 97/98) பார்வையிட சென்றவர் திரும்பவில்லை இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து அறிவிக்கவும்.

S சண்முகராஜா
387 கோயில் வீதி, நல்லூர்,
(30539)


ஜெயகாந்தனின்
**அரசறிவியல் நிறுவனங்கள்**
(EX P. S. 1. 2)
பல்கலைக் கழக அரசறிவியல் மாணவர்களுக்குரியது
(பகுதி - II மாணவர்கள் Pressure Groups, Public Opinion என்பவற்றைப் பற்றிய அடிப்படை அறிவை இந்நூலின் மூலம் பெறலாம்)
விலை 40/-
யாழ். [illegible]


## மீண்டும் அத்தப்பத்து அரசியலுக்கு

கொழும்பு, ஏப். 24

வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் முன்னாள் அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தப்பத்து விரைவில் நாடு திரும்பி ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தீவிர ரசியலில் ஈடுபட விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நடந்த தென் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடம் விடுத்த அழைப்பை ஏற்று டாக்டர் அத்தப்பத்து நாடு திரும்பி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கட்சியின் வளர்ச்சிப்பணிகளில் ஈடுபடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-எ)

## சுதந்திரக் கட்சி எம்.பி எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 24

திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின் தலைமைத்துவத்தைத் தான் ஏற்கப்போவதில்லை என்று சுதந்திரக் கட்சியில் உள்ள "ஹெல உறுமய" அணித் தலைவரும் களுத்துறை மாவட்ட எம்பியுமான திலக் கருணாரத்தினதெரிவித்திருக்கிறார். (ஒ-எ)

## நாளை வர்த்தக விடுமுறை

யாழ்ப்பாணம், ஏப். 24

நாளை திங்கட்கிழமை சித்திரா பௌர்ணமி தினத்தை முன்னிட்டு வர்த்தகவிடுமுறை தினமாகும்.

வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாசத்தின் கீழ் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் நாளை மூடப்பட்டிருக்கும். (த-162)

## அவசர கால சட்டம் நீடிப்பு!

கொழும்பு, ஏப். 24

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கும் பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் 51 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 101 வாக்குகளும் எதிராக 50 வாக்குகளும் கிடைத்தன. (த-எ)


**BITSMANS**
கல்வி நிறுவனம்
மானிப்பாய்
புதிய பிரிவு **94 O/L**
**DAY CLASS**
எமது வழமையான ஆசிரிய குழுவினால்
ஆரம்பம்: 25 - 04 - 94 திங்கள் 8.00 காலை
(விண்ணப்பங்களை முன் கூட்டியே பதிவு செய்யவும்)
(சி-7918)


"இன்றைக்கு நீ என்னோட கூடப் பரலோகத்திலிருப்பாய்"

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி மரியம்மாயோசேப்

மலர்வு: 16 – 08 – 1917
உதிர்வு: 27 – 03 – 1994

எமது அன்புத்தாயார் திருமதி மரியம்மா யோசேப் அவர்களின் மறைவின் போது நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோர் அனுதாபச் செய்திகளை அனுப்பியோர் அஞ்சலிப்பிரசுரங்களை வெளியிட்டோர், கூட இருந்து உடலாலும், உள்ளத்தாலும் உதவி புரிந்தோர், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்தவர் ஆகியவர்களுக்கு எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"யோசாறி"
மல்லாகம்.
(80550)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி

# அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம்

# நவகோண சித்திரத் தேர்த் திருவிழா சிறப்பு மலர்

24 - 04 - 1994

## ஆசிச் செய்திகள்

சைவ செம்மனச் செல்வர்களே!

திருநெல்வேலி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ரதோற்சவம் நிகழவிருப்பதறிந்து பெரிதும் மகிழ்வுறுகிறோம். ஆலய விழாக்களில் தேர்த்திருவிழா முதலிடம் பெறுகிறது:

நிலையிலா மானுட வாழ்க்கையைத் தேர்த்துகொள்ளென்பது தேர். அன்று மக்கள் உயர்வு தாழ்வு பார்க்காது வடம்பிடித்து, பக்தி பரவசமுறுவது அவர்களின் அசைக்க முடியாத பக்திக்கும் ஒற்றுமைக்கும் ஒன்றுபட்ட வாழ்வுக்கு மோர் எடுத்துக் காட்டு.

மூலமூர்த்தி எழுந்தருளப்படும் போது முகபாவத்தை உள்ளன்போடு உற்றுநோக்கினால் விசேட தேஜஸ்ஸையும், பொலிவையும் நிச்சயம் காணலாம். இவ்விழா இடையூறின்றி நிறைவுறுமானால் மக்களின் சுபீட்ச வாழ்வுக்கு அறிகுறி அது. தாயன்புக்கிணை ஏது!

ஸ்ரீசிவகாமசுந்தரி அன்னையின் திருவடிகளை திரிகரண சுத்தியோடு இறுகப் பற்றிக் கொண்டால் வேண்டியனவெல்லாம் கைகூடும், பெறலாம். அம்பாளின் திருவருளை உளமார வேண்டி எல்லோருக்கும் எமது நல்லாசிகளை வழங்குகிறோம்.

நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்

அருள்மிகு சிவகாமசுந்தரி அம்பாளுக்கு திருநெல்வேலியில் சித்திரத் தேர்ப்பவனி நடைபெறுவது குறித்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அன்பர்கள் உள்ளங்களில் தித்திக்கும் திருநாமம் சிவகாமசுந்தரி என்பது. ஆடுகின்ற கூத்தனுக்கு தாளம் இசைத்து அண்டங்களை இயங்க வைப்பவள் அன்னை சிவகாமசுந்தரி.

அம்பிகையின் அருட்காட்சியை அழகொழுகும் சித்திரத் தேரில் வைத்து தரிசிக்கும் பேறு கிடைப்பது பூர்வ புண்ணியப் பயனாகும்.

கன்னியைக் காணுமன்பு பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே'' என்று பாடினார் அபிராமிப்பட்டர். எனவே இத்திருப்பணியில் ஈடுபட்ட அனைவரையும் வாழ்த்தி அம்பிகையின் அருள்வேண்டி அமைகின்றேன்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்
துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

## அடியார்கள் துயர் போக்கும்

## ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள்

பண்டைத்தமிழரின் வழிபாட்டு முறைகளுள் சக்தி வழிபாடும் ஒன்றாகும். இவ் வழிபாடானது தொன்மைக் காலம் முதல் இன்று வரை உலகில் சிறந்து விளங்கி வருகின்றது. சக்தி வழிபாடானது ஆரம்பத்தில் கொற்றவை என்ற பெயரில் நிகழ்ந்ததைப் பழந்தமிழ் இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

அகிலாண்டேஸ்வரி எனக் கூறத்தக்க முறையில் அகிலமெங்கும் அன்னை வழிபாடு காணப்படுகின்ற போதும், தென்னாசிய நாடுகளில் இவ் வணக்கமுறை மிகவும் சிறந்து விளங்குகின்றது. குறிப்பாக ஈழத்தில் சக்தி வழிபாடானது பல்வேறு நாமங்களில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடற்பாலதாகும்.

யாழ்ப்பாணத்தில் சக்தி வழிபாட்டிற்கெனத் தனியான பல சக்தி ஆலயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ''ஆண்டிப்புலம்'' என்ற ஆதனத்தில் அமைந்து விளங்கும் அரசடி அம்மன் கோயில் சக்திக்கேயுரிய வரலாற்றுச் சிறப்புமிக்க பிரசித்தி பெற்ற திருத்தலங்களுள் ஒன்றாகும். இதனையே இன்று அடியார்கள் அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம் என அழைத்து வருகின்றனர்.

சிறப்புமிக்க இத்திருத்தலமானது சென்ற நூற்றாண்டின் மத்தியில், அதாவது ஆயிரத்தி எண்ணூற்றி நாற்பத்தி நான்காம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதை ஆலய ஏடு உறுதிப்படுத்துகின்றது. சுமார் நூற்றைம்பது வருடங்கள் பழமையுடன் அரசமரத்தடியில் ஆரம்பிக்கப்பட்ட இச் சக்தி ஆலயமானது இன்று திக்கு நோக்கிய சந்நிதானத்துடன் அரசு, வேம்பு, வில்வம் ஆகிய மரங்களைத் தலவிருட்சமாகக் கொண்டு விளங்குகின்றது. அரசும் வேம்பும் ஒன்றிக் கலந்து காணப்படுவது இத்தலத்திற்கே உரிய தனிச்சிறப்பாகும்.

இரண்டு திருக்கரங்களுடன் நின்ற கோலத்தில் திகழும் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாளின் சிலாவிக்கிரகத்தை மூலமூர்த்தியாகக் கொண்டு விளங்கும் இவ்வாலயத்தில் விநாயகர், முருகன், நவக்கிரகம், பைரவர் என்போருக்கும் பரிவாரக் கோயில்கள் காணப்படுகின்றன.

இவ்வாலயத்தின் மஹோற்சவ விழாவானது சித்திரைப் பூரணையைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு நடைபெறுவது வழக்கமாகும். இவ்வாலயத்தில் மட்டும் தான் நவகோண அமைப்பில் அமைக்கப்பட்ட சிறப்பான சித்திரத்தேர் காணப்படுகின்றது. இவ்வாலய தேர்த் திருப்பணிச்சபையினரால் அமைக்கப்பட்ட இச் சித்திரத் தேரின் முதலாவது ரதோற்சவமானது 27-4-91 இல் சிறப்பாக நடைபெற்றது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ்வாலயத்திற்கு தேவியின் திருவருளினால் 11-4-1994 ஆம் திகதி பதினைந்து பேர் கொண்ட ஒரு பொது நிர்வாக சபை ஏற்படுத்துவதற்கு திருவருள் கிடைத்தது. அதன் தலைவராக திரு அ. முத்துக்கிருஷ்ணனும், செயலாளராக திரு. ந. ஜெயத்திலகனும், பொருளாளராக திரு. அ. இ. சுரேஸும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஐந்தொழில்களில் அழித்தல் தொழிலைக் குறித்து நிற்கும் இவ்வாலயத்தின் தேர்த்திருவிழா இன்று (24-04-1994) மிகச் சிறப்பாக நடைபெறத் திருவருள் கை கூடியுள்ளது.

ஆலய வளர்ச்சியில் அக்கறை கொண்டோர் அனைவரும் ஒற்றுமையாகவும், ஈழத் தமிழர்கள் எல்லோரும் இன்பமாகவும் வாழ்வதற்கு திருவருள் பாலிக்க வேண்டுமென ஸ்ரீ சிவகாமசுந்தரியின் பாதாரவிந்தங்களைப் பயபக்தியுடன் பணிகின்றேன். ★

**அ. முத்துக்கிருஷ்ணன்,** B. A., L. L. B.
சட்டத்தரணி,
தலைவர், நிர்வாக சபை
அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம்
திருநெல்வேலி.

## பூங்கழல் போற்றி

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவந்தரும நெஞ்சில் -
வஞ்சகமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர் -
என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி -
கடைக்கண்களே

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய -
விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி -
னொளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோ னமுதுசெயத் -
திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி.

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மானிட மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
இறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.

## வாழ்த்துரைகள்

நான் அறிந்தவரையில் மிகவும் பழமைவாய்ந்த ஆலயங்களில் திருநெல்வேலி அருள்மிகு சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயமும் ஒன்றாகும். சாலிபாடிபுரம் என்று திருநெல்வேலி அழைக்கப்பட்ட காலத்திலேயே இவ் ஆலயம் தோன்றியதாக அறிகிறேன். இவ் ஆலயம் மெல்ல மெல்ல வளர்ந்து வந்து இன்று மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு நிர்வாக சபையினால் வழிநடத்தப்படுவதை வரவேற்கின்றேன். அதேசமயம் இக்கோயில் நிர்வாக சபையினால் தேர்த் திருவிழாவை முன்னிட்டு வெளியிட இருக்கும் மலருக்கான இவ் ஆசிச் செய்தியை அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இக் கோயில் மேன்மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என எல்லாம் வல்ல அருள்மிகு அம்பாளை வேண்டுகிறேன்;

திருமதி கமலாதேவி சிவசிதம்பரம்,
பிரதேச செயலர், நல்லூர்.

திருநெல்வேலி - அரசடி அருள்மிகு சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயத்தினர் இவ்வாண்டு தேர்த் திருவிழாவை முன்னிட்டு ஒரு சிறப்பு மலரை வெளிக்கொணரவுள்ளனர். இத்தகைய சிறப்பு மலர்களை வெளியிடும்போது, ஆலயத்தினுடைய வரலாற்றைச் செம்மையான முறையிலே ஆவணப்படுத்தக் கூடிய வாய்ப்பு உண்டு.

ஆலயம் எம்மக்களுடைய ஆன்மீக வாழ்வு வளர்ச்சிக்கு அரும்பணியாற்றக் கூடிய இடம். இப்பணியினை இவ்வாலய அறப்பணியாளர்களும் மனத்திலே கொண்டு பணியாற்ற வேண்டும். இவ்வாண்டு நடைபெறவுள்ள உற்சவங்கள், மஹோற்சவங்கள் யாவும் சிறப்புடனே நடைபெறவும், இவ் ஆண்டு வெளிவரும் இச்சிறப்பு மலர் சிறப்புறவும் அருள்மிகு சிவகாமசுந்தரி அம்பாளை வேண்டுகிறேன்.

பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்,
தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

திருநெல்வேலியில் அரசடியில் அமர்ந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் சித்திரத்தேரில் பவனி வரும் திருக்காட்சி காண்டற்கரிய காட்சியாகும். இத்தினத்தில் திருநெல்வேலி விழாக்கோலம் பூணும். அண்டசராசரங்களையும் இயக்கும் அளவற்ற சக்தியை ஆன்மாக்கள் வழிபட்டு வாழ்த்துவதற்கு இது ஒரு அரிய வாய்ப்பாகும். இத்தினத்தில் அம்பாளை அன்போடு வழிபட்டு அனுக்கிரகத்தைப் பெற்று உய்வோமாக!

ஆ. மகாலிங்கம்,
பிரதேசச் செயலர்,
உடுவில்.

## சக்தி வழிபாட்டின் மகிமை

சக்தியென்றும், மாயை என்றும், இயற்கை என்றும் விவரிக்கப்படும் பிரகிருதியானது பரம்பொருளின் சக்தியை வெளிப்படுத்தும் அம்சமாக இயங்குகிறது.

கர்ப்பாசயங்கள் எல்லாவற்றிலும் பிறக்கின்ற வடிவங்களுக்குப் பிரகிருதி தாயாகின்றாள். கர்ப்பதானம் செய்யும் தந்தை நான்' (அத். 14 - சா. 4) என்று பகவான் கீதையில் கூறுகின்றார்.

பரமாத்மா மூலமாயிருந்து கொண்டு பிரகிருதிமூலம் எல்லாவற்றையும் பரிணமிக்கச் செய்வதையே இச்சுலோகம் விளக்குகின்றது.

பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருக்கும் பரப்பிரம்மத்தின் சக்திக்கு விஞ்ஞானிகள் தமது ஆராய்ச்சிக்கும், பாவனைக்கும் ஏற்ப பல பரிமாணங்களைக் கொடுத்து விவரிக்கின்றனர்.

அணுசக்தி, மின்சக்தி, காந்தசக்தி, உந்துசக்தி, இயங்குசக்தி, ஈர்ப்புசக்தி என்று எத்தனையோ வகைகள்.

எங்கும் நிறைந்திருக்கும் பரப்பிரம்மம் எப்படியெப்படி எல்லாமோ பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருந்து எல்லாவித சக்திகளாகவும் இயங்கி வருகின்றது.

சாதாரண மனிதர்களின் சிற்றறிவுக்கு இந்த உண்மை புரியாது என்ற காரணத்தினால் தான் இந்துசமய ரிஷிகளும், ஞானிகளும், முனிவர்களும் அந்த சக்திக்குப் பல வடிவங்களையும், நாமங்களையும் குணங்களையும் கூறி அதை வழிபடும் நெறிமுறைகளை இந்துக்களுக்கு வகுத்துக் கொடுத்துள்ளனர்.

அணுசக்தியின் விஸ்வரூபம் வெளிப்படுத்தப்பட்ட காலகட்டத்தில் வசிப்பவர்கள் நாம். அடுத்த நூற்றாண்டில் அணுசக்தியையே தெய்வம்சமாகப் போற்றிப் பேணும் காலம் வரினும் அது வியப்புக்குரியதுமல்ல, இந்துசமய கோட்பாடுகளுக்கு அது முரண்பாடானதுமல்ல.

'அன்னையாய் கண்டவர்க்கு அன்னையாய், தந்தையாய் கண்டவர்க்கு தந்தையாய், ஆசானாய் கண்டவர்க்கு ஆசானாய், அருவமாய் காண்பவருக்கு அருவமாய், உருவமாய் காண்பவருக்கு உருவமாய், சக்தியாய், சிவமாய், நாராயணனாய், சண்முகனாக, கணபதியாய் நின்று அருள் புரியும் பரம்பொருள் ஒன்றே என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள்.

பெற்ற தாயிடம் நாம் காணும் அன்பை வேறெவரிடமும் காண முடியாது. தாயிடம் அன்பு செலுத்துவது இயல்பாகவும், இலகுவாகவும் ஏற்படுகிறது. தாயிடம் குழந்தை தான் விரும்புவதையெல்லாம் கேட்டுப் பெற்றுக் கொள்கிறது.

இந்த மனோபாவத்தில் தான் பரம்பொருளை அன்னையாய் வரித்து வடிவம் கொடுத்து கல்விக்கு ஒரு தேவி, செல்வத்துக்கு ஒரு தேவி வீரத்துக்கு ஒரு தேவியென வழிபடுகின்றோம்.

நன்றி: ஞானக்கதிர்


தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

**ஸ்ரீ அம்பாள்**
**பலசரக்கு மாளிகை**
பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி,

**குறிஞ்சி மருந்தகம்**
நவீன சந்தை,
திருநெல்வேலிச் சந்தி,

**கஜன் குறூப்**
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

**ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்**
பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி.

**தாஸ் ஸ்ரோர்ஸ்**
கலாசாலை வீதி,
திருநெல்வேலி,

தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

**லிங்கம் ரேடி சென்ரர்**
78, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**புதிய தாரகை புடைவை மாளிகை**
பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி.

தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

**வேல் முருகன்**
**சைவ உணவகம்**
பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி,

**K. A. இன்ஜினியர்ஸ்**
82 (50), கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

**இரத்தினம்**
**பாலசுப்பிரமணியம்**
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,

**அம்பாள்**
**சைவ உணவகம்**
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(30570)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த சைக்கிள் (Gents) ரொலிசன் இந்தியன் ரலி, சொப்பர் (ஜப்பான்) விற்பனைக்குண்டு. தொடர்பு: 117, சிவப்பிரகாசம் வீ., வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (30548)

திராந்திகள், பெரிய, சிறிய இரும்புக்கேற், யன்னல் கதவு நிலைகள் விற்பனைக்குண்டு. "பூரணா டிஸ்பென்சறி, 46, இராணி வீதி, நல்லூர் (கல்வித்திணைக்களத்திற்கு அருகில்). (7332)

நல்ல இன கறுப்பு நிற பொமரேனியன் ஆண் நாய்க்குட்டிகளும், சடைமுயல்குட்டிகளும், வெள்ளடியன் கோழிக்குஞ்சுகளும், நல்ல இன வளர்ப்பு புறாக்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. எம். பாக்கியநாதன், மோகன் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (30572)

நல்ல நிலையிலுள்ள Ford Cortina Car உருத்திரவீணை, ஆங்கில தட்டச்சு இயந்திரம், ஜேர்மன் பெற்றோமாக்ஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு: 37/1, செட்டித்தெருஒழுங்கை, நல்லூர். (30576)

### கோல்டன் கொமட்

கோல்டன் கொமட் 13 நாட்கள் வளர்ச்சியடைந்த பேட்டு குஞ்சுகள், சேவல்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (30502)

### துளிர்

தமிழ்நாடு புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் விற்பனையாகிறது. வசந்தம் புத்தக நிலையம், சந்தா ஏற்றுக்கொள்ளப்படும். (7324)

### பேட்டுக் குஞ்சு விற்பனை

கறளைன் பிறவுண் 1½ மாதம் வளர்ச்சியடைந்த பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (30501)

### கோழிக்குஞ்சு விற்பனை

2 மாதம் நிரம்பிய Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30544)

### சோதிடம்

பரீட்சையில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உடனே விடை கிடைக்கும்! இன்றே கேட்டுப் பாருங்கள்!! த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 381, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (முட மாவடிச் சந்தி) (30561)

### தேவை

குசன் செற்றகள் தேவை. ஸ்ரீ பரமேஸ்வராசந்தி, திருநெல்வேலி (குறிஞ்சி மெடிக்கலுக்கு அருகில்). (30567)

தேவன்ஸ் சியாக்காய்பவுடர் மற்றும் தயாரிப்புகளை தயார் செய்வதற்கு பெண்பிள்ளைகளும் தயாரிப்புகளை விற்பனை செய்ய சைக்கிள் விற்பனையாளர்களும் தேவை. தேவன்ஸ் உற்பத்தியாளர், 337/8, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (7340)

மருந்து விற்பனையில் குறைந்தது ஐந்து வருட அனுபவமுள்ள விற்பனையாளர் தேவை. ஜி. சீ. ஈ. சா/த கணிதம், ஆங்கிலம் அடங்கிய சுற்றில் திறமைச் சித்தி பெற்ற 25 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் 30-4-94க்கு முன் விண்ணப்பிக்கவும். இல. 631, உதயன். (30528)

பற்பொடி, நீலம், சியாக்காய் பவுடர், கச்சான் அல்வா மற்றும் இனிப்பு வகைகள் சைக்கிளில் வியாபாரம் செய்யக்கூடியவர்கள் தேவை. தொடர்பு: ஜெயலட்சுமி இன்டஸ்ரீஸ் பாடசாலை வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. (30540)

### திருமண சேவை

உள்ளூர், வெளியூர் மணமகன், மணமகள் ஜாதகம் இருப்பவர்கள் தொடர்பு சொர்ண, அபிராமி, துர்க்கா தேவி தேவஸ்தான வீதி, சாவகச்சேரி. (30568)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழிகள் புதன், சனி, ஞாயிறு காலை 7-00 – 11-00 வரை. சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30545)

### வீடு வாடகைக்கு தேவை

பிறவுண் றோட் கந்தர்மடம் நல்லூர் பல்கலைக்கழக சுற்றாடலில் மூன்று படுக்கை அறையுடன் சகல வசதிகளும் உடைய வீடு வாடகைக்குத் தேவை. முற்பணம் கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும்: இ. இராஜரட்ணம், 7, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டிக்குளி. (30482)

### மணமகள் தேவை

38 வயது விசாகம் 3ஆம் பாதம், கிரக பாவம் 55, ஜேர்மனி விசா யாழ். உள்ள வருக்கும், 25 வயது, பரணி, 3ஆம் பாதம். நேர்வே விசா மணப்பெண் தேவை. பரராசசிங்கம், கோண்டாவில் றோட், கோப்பாய் தெற்கு. (30546)

வீடு, அனெக்ஸ், வீடு வளவு சிறிய குடும்பத்திற்கு வாடகைக்கு, குத்தகைக்கு, ஒற்றிக்கு யாழ். நகரிலிருந்து பதினைந்து மைல் சுற்றாடலில் தேவை 2 5-94ஆம் திகதிக்கு முன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். இல. 630, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (30422)

### மணமகன் தேவை

சைவ போசன செவ்வாய் குற்றமுள்ள, 49 வயது, எஞ்ஜினியர் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்யும் செவ்வாய்க் குற்றமற்ற 46 வயதுச் சகோதரிக்கு தனியாகவோ மாற்றாகவோ மணமகனைத் தேடுகின்றனர். தொடர்பு: மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (3054

### இலங்கை திருமண சேவை

31 வயது, சுவாதி, செவ்வாய் 4, டென்மார்க்கில் தொழில்புரி வருக்கு அழகான மணப்பெண் தேவை. Sponsor செய்து அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு, செவ்வாய் காலையும் புதன் மாலையும். வியலா, நாச்சிமார் கோயிலடி. (30473)

### மணப்பெண் தேவை

செவ்வாய்க் குற்றமற்ற 31 வயது, [பூசம்] வெளிநாட்டில் இருந்து வந்தவர் கூட்டிச் செல்வதற்கு சங்கீத வாத்திய ஞானமுள்ள பெண்ணைப் பெற்றோர் தேடுகின்றனர். சந்திப்பு ஞாயிறு திங்கள் காலை, மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். [30574]

### மணமக்கள் தேவையா?

நீங்கள் எதிர்பார்க்கும் தகுந்த மணமக்கள் இருக்கிறார்கள். ஒத்துவரக்கூடிய குறிப்புகளையும், விபரங்களையும் [நேரத்தைச் செலவழிக்காமல்] திருப்தியுடன் எடுத்துச் செல்லலாம். சந்திப்பு, ஞாயிறு, திங்கள் காலை, மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். [30575]

### வீடு தேவை

ஐந்து பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியில் வாடகைக்கோ அன்றி குத்தகைக்கோ [ஒத்தி] கொடுக்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும் தொடர்பு C. M. சுகந்தினி பல்பொருள் களஞ்சியம், இல. 309, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [30555]

### யோகாசனப் பயிற்சி

யோகாசனம் பயில்பவர்களுக்கு அரிய சந்தர்ப்பம். யோகக்கலை கைநூலும், செய்முறைப் படங்களும் கொண்ட தொகுப்பு விற்பனைக்கு உள்ளது தொகுப்பு ஒன்று ரூ 50/- (சி 7909)

## சிதானந்த யோகாசன செய்முறை-22

இந்நூல் பெற விரும்புவோர்

சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி யோகி

அவர்களிடம் வாங்கிக்கொள்ளலாம்.

திவ்ய ஜீவன சங்கம், சட்டநாதர் கோயில் வீதி நல்லூர். [30571]



## யாழ். இந்து பழைய மாணவர் சங்கம்

நடத்தும்

## முழு நிலா நாள் கருத்தரங்கு

காலம்: 25 – 04 – 1994 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி

இடம்: குமாரசாமி மண்டபம்

கருத்துரை - I: இன உரிமைப் போராட்டத்தில் காஷ்மீர்: ஒரு கண்ணோட்டம்

வழங்குபவர்: கலாநிதி எஸ். கே. எஸ். நாதன் முதுநிலை விரிவுரையாளர், பொருளியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்

கருத்துரை - II: பிணி நீக்கற் கற்பித்தல் (REMEDIAL TEACHING)

வழங்குபவர்: கலாநிதி சபா ஜெயராசா தலைவர், இராமநாதன் நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

செயலாளர், பழைய மாணவர் சங்கம், யா. இ. க.

விளம்பர அன்பளிப்பு: ஊர்காவற்றுறை பல நோ. கூ. சங்கம் (சி 7910)

அச்சுவேலி வடக்கு

## அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுதர் சித்திர தேருலா 24 - 04 94

## வாழ்த்துக்கள்

வடக்கச்சு வேலிச்சிறீ
சித்திரவேலாயுதர் எண்ணக்கோயில்
வடித்த முத்துக்குமாரசாமியுடன்
வாரிப்புண்டே நடந்த ஆண்டு
எடுத்த வடிவேலாறுமுக சுவாமி
எழில்வள்ளி, தெய்வயானை
மிடுக்காகத் தேரேறி
வீதியுலா வருகின்ற காட்சி காணீர்,

முதல் முறையாய் இவ்வாண்டு
முசமாறு கொள் கடவுள் தேரிலேறி
இதயங்கள் எங்கள்
இன்புறவே வருங்காட்சி காணீர், காணீர்!

விதிசெய்யும் கொடுமைகளால்
வேதனைகள் படுமடியார் நாங்கள் மீள
துதி செய்வோம் கண்களிலே
சோனை மழை பொழிகின்ற பக்தியோடு

— அ. பொன்னையா குடும்பம்

அரசடி வீதி, தோப்பு, அச்சுவேலி [30579]

## ஹோமியோபதி மருத்துவக் கல்வி

**19 - 05 - 1994** இல் ஆரம்பமாகின்றன


1. இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் ஹோமியோபதி டிப்ளோமா கவிகற்று. இன்று வரை ஹோமியோபதி மருத்துவ சங்கத்தின் பரீட்சையும் பதிவும் பெறாது வைத்தியத் தொழில் செய்பவர்கள் எல்லோரையும் பரீட்சைக்கும், பதிவுக்கும் உட்படுத்தும் மீட்டல் பயிற்சி வகுப்புகள்.
2. சுகாதார அமைச்சின் பாடத்திட்டங்களின் படி பரீட்சை வைப்பதற்கு அனுமதி பெற்றவர்களால் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
3. வகுப்புகள் வார இறுதி நாட்களில் நடைபெறும்.
4. வகுப்புகள் யாவும் அதிகாரம் பெற்ற பரீட்சையாளரும், பதிவு பெற்ற ஹோமியோபதி வைத்தியர் சங்கத்தின் தலைவருமான டாக்டர் தி பரமசிவம் அவர்களால் நெறிப்படுத்தப்படுகின்றன.
5. விசேட அக்குபங்சர் வகுப்புகள், சீன அக்குபங்சர் சங்க அங்கத்தவரான டாக்டர் V. P. சுந்தரராஜன் அவர்களால் நெறிப்படுத்தப்படுகின்றன.
6. பதிவுபெற்ற M.BBS, DA.MS, BHMS, DA.M. வைத்தியர்களும் வகுப்பில் கலந்து கொள்ளலாம்.

அதிபர்

**சாயி மருத்துவக் கல்லூரி**

இல 6, பருத்தித்துறை வீதி (1 ஆம் ஒழுங்கை), யாழ்நகர். [சி-8036]

## நினைவஞ்சலி



சிவநெறிச் செம்மல்

**உயர்திரு. ச. நமசிவாயம்**

| தோற்றம்: | அமரத்துவம்: |
|---|---|
| 22 – 08 – 1937 | 06 – 01 – 1994 |

பிரபல சமய, சமூக சேவையாளரும் எமது சமாசத்தின் தலைவரும் சமாச வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவருமான அமரர் உயர்திரு ச. நமசிவாயம் அவர்களின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதுடன், இன்று [24 - 04 - 94] காலை 9-30 மணிக்கு சரசாலை வடக்கு ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்வுக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

சரசாலை வடக்கு கிராம அபிவிருத்தி சபை, தென்மராட்சி கிராம அபிவிருத்தி / மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசம், சாவகச்சேரி.

## இன்று நடப்பவை

யாழ். பல்கலைக்கழக புவியியல் பேரவையின் ஏற்பாட்டில் உணவுகளின் முக்கியத்துவம் பற்றிய அடிப்படை கருத்தரங்கு ஆரம்ப விழா இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

★ ★ ★

சுன்னாகம் இந்து சமய அபிவிருத்திச் சபையின் ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு உடுவில் பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் ஆலய மண்டபத்தில் நடைபெறும் ஆசியுரைகளை சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்களும் சிவஸ்ரீ S. வெங்கடேஸ்வரக் குருக்களும் வழங்குவர். (த-89)

★ ★ ★

சாவகச்சேரி பிரதேச சபையினர் ஏற்பாடு செய்துள்ள மாதாந்த ஆறிவியரங்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு உசன் மிருசுவில் பிரதேசசபை பொது நூலகத்தில் நடைபெறும்.

அரங்கில் "ஆழ்கடல் பயணமும் அகவரிசை பயன்பாடும்" என்ற தலைப்பில் திரு. ந. ராஜநேரு உரையாற்றுவார் (த)

★ ★ ★

நல்லூர் அகில இலங்கை சைவ ஆதீன ஸ்தாபனம் நடத்தும் "யோகாசன செய்முறை விளக்கம்" என்ற தலைப்பிலான மாதாந்த கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.30 மணி முதல் நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும்

★ ★ ★

யாழ். இந்துக்கல்லூரி மைதானச் சந்தியில் அமைந்துள்ள மெய்கண்டதேவர் ஆதீனத்தில் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு உமாபதி சிவாச்சாரியாரின் குருபூசை நினைவு தினம் அனுஷ்டிக்கப்படும். இன்றைய தினம் சைவ வரலாற்றுத் துறைப் பிரிவும் ஆதீனத்தில் ஆரம்பிக்கப்படும். (த)

அண்மையில் காலமான எழுத்தாளர் டானியல் அன்ரனி நினைவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நினைவஞ்சலிக் கூட்டம் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பேராசிரியர் நந்தி தலைமையில் நடைபெறும்.

நினைவுரைகளை கலாநிதி சோ. கிருஷ்ணராசா, செங்கை ஆழியான், திரு. க. தணிகாசலம் ஆகியோர் நிகழ்த்துவார்கள். (த-51)

★ ★ ★

விமானத் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்து பின்னர் மரணமான தென்மராட்சி கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாஜத் தலைவர் திரு. ச. நமசிவாயம் நினைவாக மேற்படி சமாசத்தினர் ஏற்பாடு செய்துள்ள நினைவுக் கூட்டம் இன்று ஞாயிறு சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் நடைபெறும். (த-117)

சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்ற நூலகத்தால், லெப்டினன்ட் ரஞ்சினி, லெப்டினன்ட் தமிழ் மலர் ஆகியோரின் ஞாபகார்த்தமாக நடத்தப்படவுள்ள அறிநெறி மற்றும் பொது அறிவுத் தேர்வுகள் இன்று காலை 8 மணிக்கு நடத்தப்படும்.

முத்தமிழ் மன்ற நூலகத்தினால் நடைபெறவுள்ள இத்தேர்வுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் மே மாதம் 10ஆம் திகதி நடைபெறும். (த-15)

அன்னையைச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு திருக்காட்சியளித்து இஷ்டசித்திகளைக் கொடுத்தருள புனிதவேளையான பத்து மணிக்கு வருகின்றாள். வன்னையிலே வந்துதித்து வற்றாத அருளைத் தினமும் தரும் தேவியே! எம்மைப் பிடித்த அனைத்துத் துன்பங்களையும் தேரேறி வரும் நீயே தீர்த்தருள வேண்டும் அம்மா!

அன்னையைச் சரணடைந்து அதிசுவரம் பெறுவோம்.

உ

## துயர் தீர்ப்பாய் வேலா

நீர் வேலியுறை நிரம்பு மருள்
நல்கு மெழில் வேலா
கூர் வேலினாலே சூரனை வதைத்
தும்பர் குறை தீர்த்தாய்
தேரின் மீதில் வள்ளி தெய்
வானையுடன் வந்தே
பாரின் துயர் தீர்ப்பாய்
கொடும் பாதகரை அழிப்பாய்

- ஐ. சிவராசா.

(இன்று நீர்வேலி கந்தசாமி கோயில் தேர்த்திருவிழா)

[30583]

தாய்மார்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

## பளிச்சிடும் வெண்மைக்கு

## றோயல் நீலம்

கடைகளில் விற்பனையாகும் நீலப் பக்கெட்டுகளைப் போல, போலி நீலம் இல்லையென தமிழீழத்தில் உத்தரவாதத்துடன் விற்பனையாகின்றது

100 ஆடைகளுக்கு ஒரு பக்கெட் போதுமானது. றோயல் நீலம் ஒரு பக்கெட் 6/50 மட்டுமே.

சந்தைப்படுத்துவோர்: றோயல் இன்டஸ்றிஸ், பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டை. (சி-7767)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 17 | 24 |
| 09 | 04 |
| 1925 | 1987 |

**திருமதி சாராம்மா மாணிக்கம்**

இன்றும் என்றும் கண்கள் கலங்கி பாதம் பணிந்து நிற்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், (7342)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/1, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## தெற்கில் தெரியும் 3 துருவங்கள்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணப் பிராந்தியத்தைக் கைப்பற்றும் தமது இறுதித் தாக்குதலை நடத்துவதற்கு இராணுவம் தயாராகி வருகிறது. சீனா உட்பட வெளிநாடுகளிடம் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள் வந்து சேர்ந்ததும் தாக்குதல் நடவடிக்கை ஆரம்பமாகும்.

பெரிய அளவிலான அந்த இராணுவ நடவடிக்கை அநேகமாக மே மாதத்தில் நடத்தப்படலாம் என்று நம்பப்படுகிறது. அந்த பெருந்தாக்குதலுக்கான கிழக்கிலிருந்து பெரும் எண்ணிக்கையான துருப்புகள் வடக்கே நகர்த்தப்படுகின்றன.

இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி, செய்தி நிறுவனம் ஒன்றினால் இத்தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள், மண்கிண்டிமலை மற்றும் பூநகரித் தாக்குதல்களை நடத்தி அரச இராணுவத்தை மண்ணில் வீழ்த்திய பின்னர், அவற்றுக்குப் பதிலடி கொடுக்க வேண்டும் என்று படையினர் சந்தர்ப்பம் பார்த்துக் காத்துக் கொண்டிருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

விடுதலைப் புலிகளின் கையினால் தோல்வி கண்டு வீழ்ந்த நிலையில் இருந்து எழுந்து மீண்டும் தாம் உயர்ந்து நின்று காட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் அரச படை உயர் அதிகாரிகள் செயற்பட்டு வருவது ஒன்றும் வினோதம் அல்ல.

தென்மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றால், அந்தக் கையோடு வடக்கில் ஒரு பெரும் தாக்குதலை நடத்தினால், மேலதிக புள்ளியைக் காட்டி ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தல்களில் வாக்கு வங்கியைப் பலப்படுத்த முடியும் என்று அரசாங்கம் கணக்குப் போட்டது! திட்டமிட்டிருந்தது.

ஆனால் தெற்கின் ஆளுங்கட்சிக்குக் கிடைத்த தோல்வி அரசின், இராணுவத்தின், திட்டத்தை நடைமுறைப்படுத்த முட்டுக்கட்டையாகிவிட்டது. வடக்கின் மீதான முழு இராணுவத் தாக்குதலுக்குத் தயாரிக்கப்பட்ட நேர அட்டவணையை மாற்ற வேண்டிய அல்லது முற்றாகக் கைவிட வேண்டிய சூழ்நிலையைத் தோற்றுவித்தது.

ஆட்சித் தலைவர்களைப் பொறுத்தவரையில் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு முற்றுமுழுதான அரசியல் தீர்வா! இராணுவத் தீர்வின் பின்னர் அரசியல் தீர்வைத் திணிப்பதா; முற்றுமுழுதான இராணுவத் தீர்வா என்ற மூன்றில் எதற்கு முதலிடம் கொடுப்பது என்பது குறித்து முடிவு எடுக்க முடியாத ஓர் இக்கட்டான நிலையில் அவர்கள் குழப்பமுற்று நிற்கின்றனர்.

இரண்டு பிரதான தேர்தல்களும் வருவதால் இராணுவ நடவடிக்கை அவசியம் தானா என்று கேட்கும் மனப் போக்கும் அரும்பி வருகிறது. ஆனால் யுத்தத்தினால் — ஆயுதக் கொள்வனவில் — உழைக்கும் உயர் மட்டங்களும், இராணுவ அதிகாரிகளும் சூழ்நிலைக்கு ஏற்ப முந்திய திட்டத்தை மாற்றுவதற்குத் தயாரில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொது மக்கள் ஐக்கிய முன்னணி, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது என்ற நிலைப்பாட்டை பகிரங்கமாக வெளியிட்ட பின்னர் ஆளுங்கட்சி அரசியல் தலைவர்களும் அந்த வழியையே நாடுவர் என்பதனை அறிந்து —

அவ்வாறு ஒரு மாற்றம் ஏற்படாமல் தடுப்பதை நோக்கமாகக் கொண்டே, வடக்கின் மீது இறுதித் தாக்குதல் நடத்துவது என்ற நிலைப்பாடு தொடர்கிறது என்ற தகவலை செய்தி நிறுவனங்களுக்கு இராணுவ உயர் அதிகாரிகள் ஊட்டிக் கொண்டிருக்கின்றனர்.

தென்னிலங்கையை ஒரே பார்வையில் நோக்கும் போது எதிரணி அரசியல் பீடம், ஆளும் அரசியல் பீடம், இராணுவ பீடம் ஆகிய மூன்று துருவங்கள் தெரிகின்றன. இவற்றில் எந்தப் பீடம் மேலோங்கும் என்பதனைப் பொறுத்தே தெற்கின் அரசியல் புலத்தின் வடிவம் அமையும்!

## புலிகளின் குரல் வானொலியில்

24-04-1994

ஞாயிறு இரவு

★ 8-01 — இசையரங்கம் - நிகழ்ச்சியில் பாடுபவர் திரு. செ. குமாரசாமி
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம் "இலங்கை மண் 23 ஆம் அங்கம்"

25-04-1994

திங்கள் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்.
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — மணியாரத்தின் தொடர்ச்சி.

## நாளை

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் மாதாந்த பூரணைக் கருத்தரங்கு நாளை மாலை 4 மணிக்கு நிலைய மண்டபத்தில் இடம்பெறும்.

"எமது மதத்தின் அடிப்படை உண்மைகள்" என்ற தலைப்பில் மெய்யியல் விரிவுரையாளர் வே. யுகபாலசிங்கம் உரையாற்றுவார். [த-17]

★ ★ ★

வலி. தெற்கு பிரதேச சபையும், அதன் சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் முழுநிலா அறிவியற் கருத்தரங்கு நாளை திங்கள் பிற்பகல் 4 மணிக்கு சுன்னாகம் பெரிய மதவடி பொது நூலக மண்டபத்தில் நடைபெறும்.

"ஆளுமை வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்" என்ற தலைப்பில் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த திரு. இ சிவசங்கர் கருத்துரை வழங்குவார். [த]

★ ★ ★

யாழ். கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்த மடத்தில் நடைபெறும் மாதாந்த சொற்பொழிவுத் தொடரில் நாளை பிற்பகல் 3. 30 மணிக்கு "பிதிர் தேவ வழிபாடுகள்" என்ற பொருளில் சிவஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள் சொற்பொழிவாற்றுவார். [த]

★ ★ ★

டாக்டர் எம். கே. முருகானந்தன் எழுதிய "வைத்தியக் கலசம்" என்ற நூலின் வெளியீட்டுவிழா நாளை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் எழுத்தாளர் செ. ணியான் தலைமையில் நடைபெறும். [த-173]

★ ★ ★

சரசாலை இந்து இளைஞர் மன்றத்தினர் நடத்தும் சித்திரா பௌர்ணமி கருத்தரங்கு நாளை காலை 9 மணிக்கு சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயத்தில் நடைபெறும்.

கருத்தரங்கில் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. சிவகுருநாதன், மட்டுவில் கமலாசினி வித்தியாலய அதிபர் செ. சுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர். [த-117-30]

★ ★ ★

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் மாதாந்த அமர்வு நாளை திங்கள் காலை 10 மணிக்குப் பேரவை மண்டபத்தில் நடைபெறும். பேரவை உறுப்பினர்கள் கலந்து கொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (த)

★ ★ ★

வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நாவலர் தருமகர்த்தா சபையின் ஆதரவில் பௌர்ணமி தோறும் நடைபெறும் சமய விரிவுரைத் தொடரில் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பௌராணிகர் திரு. மு தியாகராசா 'நாலைக்கு நாம் செய்யவேண்டியவை', என்னும் பொருளில் விரிவுரை நிகழ்த்துவார். (த)

★ ★ ★

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சியும், விரிவுரைகளும் நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய பணிமனையில் நடைபெறும்.

★ ★ ★

வயிற்றுவலி நோயும் அதன் தடையும் பற்றிய சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று நாளை காலை 9 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மத்திய மருந்தக மண்டபத்தில் நடைபெறும். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இக் கருத்தரங்கில் யாழ். மருத்துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர் சி. என். நச்சினார்க்கினியன் கருத்துரை வழங்குவார். (க-18)

## வில்லூன்றி தீர்த்தக் கேணி இறைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 24

நாளை இடம்பெறும் சித்திரா பூரணை விழாவை முன்னிட்டு வில்லூன்றி தீர்த்தக் கேணி இன்று இறைத்துத் துப்புரவு செய்யப்படவிருக்கிறது. கேணியில் பெறுமதி மிக்க பொருள்களைத் தவறவிட்டவர்கள் நிர்வாகத்துடன் இன்று தொடர்பு கொள்ளுமாறு பரிபாலனசபை கேட்டுக் கொள்கிறது.

திங்கட்கிழமை அதிகாலை வில்லூன்றி விநாயகர் தீர்த்தோற்சவம் நடைபெறும். அதிகாலை 5 - 30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். அடியார்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (க)

## விளையாட்டு நிகழ்வுகள்

பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழக ஸ்தாபகர் அமரர் எஸ். சிவகுரு ஞாபகார்த்தமாக நடத்தப்படும் — 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — விலகல் முறை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிறு பிற்பகல் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.45 மணி — அப்பால் வி.க. அணி எதிர் ஞானமுருகன் வி.க. அணி.

★ 4.45மணி — சென். அன்ரனீஸ் வி.க. அணி எதிர் விநாயகர் வி.க. அணி. (த)

★ ★ ★

யாழ்ப்பாணம் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கழக மைதானத்தில் இரண்டாவது வருடமாக நடத்தும் மென்பந்து கிரிக்கெட் மற்றும் கரப்பந்தாட்டம் (ஓவர்) சுற்றுப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:

கிரிக்கெட்

★ காலை 9 மணி :- நிலாவெளி வி. க. எதிர் யாழ். தபாலகம்.

★ பிற்பகல் 3 மணி :- மல்லாகம் வி. க. எதிர் ஈச்சமோட்டை ச.ச.நி. வி க.

கரப்பந்தாட்டம்

★ பிற்பகல் 2 30 மணி :- வளர்மதி வி.க. 'ஏ' அணி எதிர் சென். மேரிஸ் வி க, அணி. (உ)

## சீமெந்து ஊழியருக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 24

இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் 1992 ஆம் ஆண்டுடன் 25 ஆண்டுகள் சேவையாற்றிய ஊழியர்களுக்கு கூட்டுத்தாபனச் சின்னம் செதுக்கிய தங்கப்பதக்கம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை தற்காலிக காரியாலயத்தில் யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகரால் வழங்கப்படும். (க)

## பேச்சின் —

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

"இனப்பிரச்சினை என ஒன்றில்லை. இருப்பது பயங்கரவாதப் பிரச்சினையே. அதனை இராணுவ நடவடிக்கைகள் மூலம் அடக்கிவிடுவோம்" — என்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அடிக்கடி கூறிவர —

அதற்கு மாறாக அவரது அமைச்சரவையில் உள்ள முக்கிய பிரமுகர் இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார்.

கொக்காலைப் பகுதியில் மாளியதேவ பெண்கள் வித்தியாலய மாடிக் கட்டடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையிலேயே அமைச்சர் தயாரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண இருசாராருக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இனப்பிரச்சினையால் அகதிகளாகவுள்ள மக்கள் பெரும் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். தற்போதைய யுத்தத்தினால் அப்பாவிகள்தான் மரணமடைகின்றனர். அவர்களில் ஊனமடைந்தவர்கள் மற்றும் அகதிகளின் எண்ணிக்கை அதிகம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (உ-எ-6)

# அரசுக்கு அரசியல் அடிகொடுக்கும் விதத்தில் எழுச்சியுடன் மேநாள் விழா

## வெகுஜன அமைப்புகள் நடத்தும்

யாழ்ப்பாணம், ஏப். 24

எதிர்வரும் மே நாளை மிகவும் எழுச்சிகரமாகக் கொண்டாடுவதற்கு வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

தமிழ் மக்களும், மனித நேயமுள்ள மனித அமைப்புகளும் காட்டிய நேசக் கரத்தைப் புறக்கணித்த ஐக்கிய தேசியக் கட்சியை தூக்கி எறியும் விதத்தில், அரசியல் ரீதியாக அடி கொடுக்கும் வகையில் இம்முறை மே தின நிகழ்வுகள் அமைய வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் திரு கு. சிறில் தலைமையில் மே தின ஒழுங்குகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் நேற்று முற்பகல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு சி இளம்பரிதி, தொழிற்சங்கப் பொறுப்பாளர் திரு இமையவன் ஆகியோரும் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமிழீழத் தேசம் மே நாளுக்கும் புதிய வரைவிலக்கணத்தைக் கொடுத்துள்ளது.' —

தமிழ் மக்களுக்கு எதிராக ராசசிந்தித்த அனைத்து தடைகளையும் தாண்டி எமது மக்கள் தமிழீழத்தை நிர்மாணிக்கத் தொடங்கி விட்டார்கள்; வருகின்ற மே நாள் தமிழீழத்துக்கான விடியலாகட்டும் — என்று கூட்ட முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மிதிவெடியை அழுத்திய சிறுவனின் கை துண்டிப்பு

### முருங்கன் பகுதியில் சம்பவம்

மிதிவெடி ஒன்றை கையினால் அழுத்திப் பார்த்த போது அது வெடித்ததால் சிறுவன் ஒருவரின் வலது கை மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்டது.

முருங்கன் கற்கடந்தகுளம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் நடந்தது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சூசைப்பிள்ளை தேவதயாளன் (வயது 13) என்பவரே கைதுண்டிக்கப்பட்டவர் ஆவார்.

சம்பவதினம் பிரஸ்தாப சிறுவன் மாட்டை மேய்க்கக் கட்டுவதற்காக கொண்டு சென்ற போது, மண்ணில் புதைந்து கிடந்த மிதிவெடியை எடுத்து கையினால் அழுத்தியபோது அது வெடித்தது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## முஸ்லிம்களும்...,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைத்துவங்களுடன் ஒரு போதும் கூட்டாக ஒருநாக்கால் பேசமாட்டாது.

தமிழர்களுடன் பேசும் போது "உங்கள் கோரிக்கையை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் என்ன செய்வது? முஸ்லிம்கள் இதற்கு இணங்கமாட்டார்களே" என்பார்கள்.

முஸ்லிம்களிடம் பேசும் போது "உங்களின் தனித்துவம் பாதுகாக்கப்படுவது அவசியம்தான். ஆனால் முஸ்லிம்களுக்கு அதிகாரப் பங்கீடு செய்வதை தமிழர்கள் ஏற்றுக் கொள்ள வில்லையே!" என்பார்கள்.

### ஆசைவார்த்தை கூறுவார்கள்

அதுமட்டுமல்ல — சிங்களவர்களும் முஸ்லிம்களும் சேர்ந்து கிழக்கில் தமிழர்களை ஆட்டிப் படைப்போம் என்றும் —

முஸ்லிம் ஒருவரை முதலமைச்சராக்குவோம் என்றும் ஆசைவார்த்தையும் கூறுவார்கள்.

ஆடு நனைவதைக் கண்டு அழுகின்ற ஓநாய்போல முஸ்லிம்களுக்காக பரிதாபப்படுவார்கள் முஸ்லிம்களையும் தமிழர்களையும் மூட்டியும் வைப்பார்கள்,

இந்த வரலாற்றுப் போக்கை மாற்றவேண்டுமானால் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மத்தியில் ஒருமித்த சிந்தனைப் போக்கு ஏற்படவேண்டும்.

விடுதலைப் புலிகள் இல்லாமல் தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கு பொதுவாக முன்வைக்கப்படும் கோரிக்கை எவ்வளவு வலுவுடையதாக இருக்கும்? என்ற கேள்வி இருக்கிறது.

அதேபோல் புலிகளும் அரசும் செய்யும் எந்த ஒரு பேச்சுவார்த்தையின் முடிவையும் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்வார்களா என்ற கேள்வியும் இருக்கிறது.

ஆகவேதான் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் வந்து விடுதலைப் புலிகள் பங்குபற்றாத போதும் தமிழ் முஸ்லிம் சமூகங்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளக் கூடிய பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் போது அந்தப் பேச்சுவார்த்தைகளின் பக்கம் உங்களின் கவனத்தையும், ஒத்துழைப்பையும் ஈர்க்க விரும்புகின்றேன்.

### தமிழ் — முஸ்லிம் உறவு

தமிழ் — முஸ்லிம் உறவுகளில் நம்பிக்கையுள்ள புதிய சக்திகளின் சகாப்தம் துரிதமாக வளர்ச்சியடைந்து வருகிறது. இந்த சகாப்தத்தின் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளும் தம்மை முதன்மையாக இணைத்துக் கொள்ள வேண்டும்.

அல்லாமல் நீங்கள் தனிப்படுவதையும், அதன் மூலம் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படுவதையும் நாம் விரும்பவில்லை. அத்தகைய விளைவுகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டிய கடமைப்பாடு நமக்கு இருக்கின்றது.

### தேர்தல் நடைபெறும் காலகட்டம்

ஜனாதிபதித் தேர்தலும் நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெறவுள்ள காலகட்டத்தில் வடக்கு — கிழக்கு பிரச்சினையில் முஸ்லிம் மக்களும் இணக்கம் ஒன்றைக் காண்பது பேரினவாத சக்திகளுக்கு நிச்சயம் தலையிடியை ஏற்படுத்தும். அதே வேளை அவர்களின் உண்மை நிலையும் வெளிச்சத்திற்கு வரும்,

அந்த நிலையில் — தமிழ் முஸ்லிம், மலையக சிறுபான்மைச் சமூகங்களில் அக்கறையுள்ள சிங்களத் தலைமைத்துவத்தை அடையாளம் காணுவது இலகுவாக இருக்கும்; கடந்த கால அனுபவங்களூடாக நிகழ் காலத்தை உரைகல்லாக்கி பார்க்கவும் அது உதவும்.

முஸ்லிம் சமூகத்துக்கு இழைக்கப்பட்ட அநியாயங்கள், அநர்த்தங்கள் எழுத்தில் வடிக்க முடியாதவை அவற்றிற்கு எவ்வளவு தூரம் நீங்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்பாக இருந்தீர்கள் என்பதை என்னால் கூறமுடியாது. இருப்பினும் கூட முஸ்லிம் சமூகத்துக்கு புலிகள் செய்த தவறுகளுக்காக வருந்தும் தெரிவித்து பகிரங்க மன்னிப்புக் கேட்கும் கடமைப்பாடு உங்களுக்கு இருக்கிறது என்பதை நினைவூட்டுவது எனது கடமையாகும்.

முஸ்லிம்களின் இழப்புகளுக்கு நஷ்டஈட்டையும் வடக்கிலிருந்து துரத்தப்பட்ட முஸ்லிம்களை நஷ்டஈட்டுடன் மீளக் குடியமர்த்த வேண்டும் என்பதையும் நீங்கள் பகிரங்க நிலைப்பாடாக வெளிப்படுத்த வேண்டும்.

### சுமுகமான நிலை

தமிழ் முஸ்லிம் உறவுகளில் ஒரு சுமுகமான நிலை வளர்ந்து வருகிறது.

பேரினவாதசக்திகளும் அதன் அடியாட்களும் அதை விரும்பப் போவதில்லை மீண்டும் கிழக்கில்தமிழ்முஸ்லிம்மோதல்களையும், இரத்தக் களரியையும் ஏற்படுத்த அவர்கள் முயலக் கூடும். அவர்கள் விரிக்கும் சதி வலைக்குள் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் விழுந்து விடக் கூடாது.

இது விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் மிகவும் அவதானத்துடனும் அக்கறையுடனும் இருக்கின்றது.

தமிழ் — முஸ்லிம் உறவுகளுக்கு குந்தகமாக இருக்கும் சக்திகளை இனம்காண முயற்சிக்கிறோம். அதற்கான இயக்கரீதியான அமைப்பு வேலைகளை எங்கள் இயக்கமும் ஏனைய தமிழ் இயக்கங்களும் துரிதப்படுத்த வேண்டும்.

நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்று அறிந்து கொள்வோம். சகோதர முரண்பாடுகளை பகை முரண்பாடுகளாக்காமல் தமிழ் —முஸ்லிம் உறவுகளை வளர்த்தெடுப்போம். பேரினவாதப் பொது எதிரியை வெல்லுவதற்கு சிறுபான்மைச் சமூகங்கள் ஒன்றிணைவோம். பரஸ்பரம் சமூகங்களின் அபிலாசைகளை அங்கீகரிப்போம்.

சிறுபான்மை சமூகங்களின் நலன்களில் அக்கறையுள்ள சிங்கள சக்திகளை இனங்காண்போம். அவர்களோடும் பேசுவோம். எல்லாவற்றிற்கும் தமிழ் முஸ்லிம் சமூகங்களின் அரசியல் சக்திகள் ஒன்றிணைந்து ஒருமித்த கோரிக்கையை முன்வைப்போம்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் அஷ்ரப் மேலும் தெரிவித்துள்ளார். (உ-எ-ரி-9)

## ஆலயங்களில்

வரணி தாவளை இயற்றாலை மடம் ஸ்ரீ நாகதம்பிரான் தேவஸ்தான வருஷாபிசேகமும் அலங்கார உற்சவமும் நாளை சித்திராபௌர்ணமி தினத்தன்று நடைபெறும். (க-117)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய சித்திரா பௌர்ணமி தீப இசை அரங்கில் நாளை மாலை சங்கீத கலாவித்தகர் "திருமதி மேரி றேஜா ஜஸ்ரின் இன்னிசைக்கச்சேரி நடைபெறும்" (க)

★ ★ ★

யாழ். மின்சார நிலைய வீதி ஒழுங்கை, ஸ்ரீ ஞானவைரவர் ஆலய சித்திரா பௌர்ணமி விழாவில் நாளை மாலை 6. 30 மணிக்கு, தேவார இசைமணி தாவடியூர் எஸ். ஆர். திரு. திருஞானசம்பந்தனின் பண்ணிசைச் சச்சேரியும் அதனைத் தொடர்ந்து ஸ்ரீ தேவி வில்லிசைக் குழுவினரின் "சத்தியவான் சாவித்திரி" வில்லிசையும் நடைபெறவுள்ளன. (க)

★ ★ ★

தொல்புரம் கொட்டியம்பதி ஸ்ரீ ஆதிமுத்து மாரியம்பாள் கோயிலிற்கு பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய ரதத்தின் வெள்ளோட்டம் நாளை நண்பகல் 12. 00 மணிக்கு இடம்பெறும் (ட-30)

## கண் சிகிச்சை முகாம்

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ நூற்றாண்டு நிகழ்ச்சிகளை ஒட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் வசதி குறைந்த மாணவர்களுக்கு கண் சிகிச்சை முகாம் ஒன்றை நடத்த உள்ளது.

கண் பார்வை கோளாறுடைய வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் வடமராட்சியைச் சேர்ந்தவர்கள் நாளை காலை 10 மணிக்கு சேவாச்சிரமத்தில் தம்மை பதிவு செய்து கொள்ளும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## நிக்ஸன் காலமானார்

அமெரிக்காவின் 37 ஆவது ஜனாதிபதியாக 1969 முதல் 1974 ஆம் ஆண்டு வரை பணியாற்றிய திரு. றிச்சர்ட் நிக்ஸன் தனது 81 ஆவது வயதில் நேற்றுக் காலை காலமானார்.

அமெரிக்க வரலாற்றில் பதவியிலிருந்த போது ராஜினாமாச் செய்த ஓரே ஒரு ஜனாதிபதி இவராவார். 'வாட்டர்கேட்' ஊழல் விசாரணையைத் தொடர்ந்து அவர் பதவி விலகினார். (உ-எ)

## அத்துலத்முதலிக்கு கொழும்பில் சிலை

கொழும்பு, ஏப். 24

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான லலித் அத்துலத் முதலியின் முதலாவது நினைவு தினத்தை ஒட்டி பல நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு பிளவர் வீதிச் சந்தியில் அத்துலத் முதலிக்கு சிலை நிறுவப்படும். இதற்கான அடிக்கல் நாட்டு விழா நாளை திங்கட்கிழமை இடம்பெறும்.

## அருளோடு நீக்கமற இருப்பவன் 'இறைவன்'

குடத்தைப் பார்த்தவுடன், குடத்தை செய்த ஒருவன் இருக்க வேண்டும் என்பது உறுதி ஆகிறது. உலகம் காரியப்பாடு உடையது. காரியம், கர்த்தா இன்றி நிகழாது.

அதேபோல உலகைப் பார்க்கும் போது, உலகைப் படைத்த ஒரு பரம்பொருள் உண்டு என்று மதிப்பதுவே அறிவுடைமை. ஆனால் அது கண்களுக்குத் தெரியவில்லையே என்று ஐயுறுவது மடமை.

"இரவில் ஆகாயத்தில் பல நட்சத்திரங்களைப் பார்க்கிறாய். ஆனால் சூரியன் உதித்ததும் அவை கண்ணுக்குத் தெரியவில்லை ஆதலால் பகல் நேரத்தில் நட்சத்திரங்களே இல்லை என்று சொல்லலாமா? மனிதனே! உனது அஞ்ஞான நிலையில் நீ இறைவனைப் பார்க்க முடியாததால் இறைவனே இல்லை என்று சாதிக்காதே" என்கிறார் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்.

மலரிலுள்ள மணம் கண்ணுக்குத் தோன்றுகிறதா? நெருப்பில் உள்ள சூடு கட்புலனுக்குத் தோன்றுகிறதா? கடல் நீரில் உள்ள உப்பு, கண்ணுக்குத் தோன்றுகிறதா? இல்லையே!

எனவே உணர்வு விழியினால், உணரப்படுகிற பொருளே பரம்பொருள் என்றாகிறது அந்த உணர்வு, உலக நினைவிலிருந்து நீங்கி, உலகை மறந்து, உள்ளத்தையும் மறந்து, உணர்வையும் மறந்து, உயிரையும் மறந்த போது அரும்புகிற ஒன்று. நூலறிவினால் வாலறிவனைக் காண இயலாது.

பாலில் நெய் இருக்கிறது. தெரியவில்லை. கண்ணுக்குத் தெரியாததால், பாலில் நெய் இல்லை என்றால் நம்மை அறிவுள்ள உலகம் பழிக்குமன்றோ?

ஆகவே, கடவுள் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் அருளோடு நீக்கமற நிறைந்திருக்கிறார். இது உறுதி. முற்றிலும் உண்மை.

— திருமுருக கிருபானந்த வாரியார் —

## கருணையின் வடிவான கைலாச பிள்ளையார்

ராகம் — பாகேஸ்வரி தாளம் — ஆதி

பல்லவி

கருணையின் வடிவான கைலாச பிள்ளையார்
கைவிட மாட்டாரடி - தோழி!
......(கரு......)

அனுபல்லவி

செந்தமிழ் மாமன்னன் சங்கிலி அரசாண்ட
செந்தமிழ் நகரான நல்லையில் வளர்கின்ற
......(கரு......)

சரணம்

எனக்கென்றும் நீயென்றே புகலடைந்த உன்னை
எனக்கினி நீயென்றே சரணடைந்த பின்னர்
எனதெல்லாம் உனக்கென்றே சரண்புகுந்த பின்னர்:
எனக்கெல்லாம் நீயென்றே சரணடைந்த உன்னை
......(கரு......)

......முருகு

(இன்று காலை நல்லூர் கைலாசபிள்ளையார் தேர்த் திருவிழா நடைபெறுகிறது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக விரைவில்......
உங்கள் கண்ணெதிரில்.....

போராளிகளும், மக்களும் இணைந்து வழங்கும்

**நிதர்சனம் நிறுவனத்தின்**

சிறப்பு வெளியீடு

# காற்று வெளி

தரமான கலைப் படைப்பின் திறமான கருத்தோவியம்

★ மக்களோடு புலிகள்
★ சண்டைக் காட்சிகள்
★ நெஞ்சை உருக்கும் சம்பவங்கள்

உங்கள் இதயங்களில் இடம் பிடிக்கும் இன்னும் பல அரிய கண்ணைக் கவரும் வண்ணக் காட்சிகள்

மறவாதீர்கள் **காற்று வெளி**

தவறாதீர்கள் பார்த்து மகிழ

இது ஒரு நிதர்சனம் தயாரிப்பு

[30549]


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சின்னத்துரை

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வேலணை வடக்கு 5 ஆம் வட்டாரத்தை வதிப்பிடமாகவும் கொண்டு தற்பொழுது பூநகரி நல்லூரில் வசித்தவருமாகிய கந்தையா சின்னத்துரை 22 - 4 - 94 இல் பூநகரியில் காலமானார்:

இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், வீரசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தருமலிங்கம், குணலிங்கம், மங்கையர்க்கரசி, மகேஸ்வரி, சுந்தரலிங்கம், கோமளேஸ்வரி, பரமேஸ்வரி, பஞ்சலிங்கம், காலஞ்சென்ற கமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வலேஸ்வரி, தர்மபூபதி, சிவலிங்கம், தருமராஜா, சாந்தினி, பாலச்சந்திரன், சண்முகராஜா, நந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், உமாதேவி (ஜெயா), ரவீந்திரன், செந்தில்குமாரி, செந்தில்குமார், வசந்தன், சுமங்கலா, சுகிலா, சசிதரன் சசிக்குமார், குகன், சுபாஜினி, சுகந்தினி, சுரேந்தினி, அறிவரசி, ஜனார்த்தனன், சுவஸ்திகா, சுஜேந்திரன், தினேஸ், வினோ, தர்சிகா, றஜீவன், தனுசிகா, றமணன், கவிபரசு, இராமு ஆகியோரின் பாசமிகு பேரனும், சஜனியின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை பூநகரியில் 23 - 4 - 94 இல் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
த. ரவீந்திரன் (பேரன்)

நீர்வேலி மேற்கு,
மாசிவன்,
நீர்வேலி.

(30587)

### E.T. SCOTT

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த எட்வேட் துரைசிங்கம் ஸ்கொட் காலமானார்.

அன்னார் செல்லமலரின் அன்புக் கணவரும், இந்திராணி, காலஞ்சென்ற ஜெயக்குமார் ஸ்கொட். ஜோர்ஜ் செல்வகுமார் ஸ்கொட், காலஞ்சென்ற இந்திரகுமார் ஸ்கொட் ஆகியோரின் அன்புத் தந்தையும், K.W. விமலராஜனின் (மெய்வல்லுநர் பயிற்சியாளர் அன்பு மாமனாரும், திருமதி L. C. துரைரத்தினம் (U. S. A.) R.R. ஸ்கொட் ஆகியோரின் அன்புச் சகோதரரும், டேவிட் (உமார்), பிற்றிஸ் (கிறிஷோ) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 23-4-94 சனிக்கிழமை கோப்பாயில் நடைபெற்றது இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
G S ஸ்கொட் (மகன்)

கோப்பாய். [சி/7921]

### திருமதி அன்னபாக்கியம் நடராசா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாக கொண்டவரும், ஊரெழுவில் வசித்தவருமாகிய திருமதி அன்னபாக்கியம் (செல்லம்) நடராசா 21-04-94 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் நடராசாவின் அன்பு மனைவியும், திருமதி க சாந்தினி, சாந்தகுமார் (லிபியா), நந்தகுமார் (சவூதி), திருமதி கமலினி வசந்தகுமார், சுபோதினி ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற மனோன்மணி (பத்மமேனி), சின்னமணி தேவராணி, கணேசலிங்கம் ஆகியோரின் சகோதரியும், கணேசலிங்கம் குகதாசன், செல்வரத்தினம், சர்வேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், தன்யா, சுபாங்கினி சிந்தூரி, நிவேதனா, நிசாந், சாளினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

மரணச் சடங்கு பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-
திரு. செ நடராசா

கொலனி ஒளவு கிழக்கு,
ஊரெழு

(30573)

### திருமதி ஆரோக்கியம் சாமுவேல்

[இளைப்பாறிய ஆசிரியை]

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் புவனேஸ்வரி அம்பாள் வீதி அரியாலையை வசிப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற சாமுவேல் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆபிரகாம், ஏசாயா, எசேக்கியேல், இன்னாசி ஆகியோரின் அன்பு சகோதரியுமான ஆரோக்கியம் கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார் அன்னாரின் நல்லடக்க ஆராதனை 24-04-1994 இன்று மு.ப 11.00 க்கு அன்னார் வசித்த இடத்தில் நடைபெறும்.

தகவல்:-
திரு. ஏ. அருள்தாசன்
[ஆசிரியர்]

64, புவனேஸ்வரி அம்பாள் வீதி,
அரியாலை.

(30591)

## பாசையூர் கடற் பகுதியில் அந்தோனியார் சிலை மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

பாசையூர் கடலில் இருந்து கடந்த புதன்கிழமை அந்தோனியார் சிலை ஒன்றை அப்பகுதி மீனவர்கள் மீட்டு எடுத்துள்ளனர். வெண்கலத்திலான இந்த அந்தோனியார் சிலையை மீனவர்கள் பாசையூர் பங்குத் தந்தையிடம் ஒப்படைத்துள்ளனர்.

பாசையூர் அந்தோனியார் கோவிலில் தற்போது வைக்கப்பட்டுள்ள இந்த சிலையை ஏராளமான மக்கள் தரிசித்துச் செல்கின்றனர்.

( த- 17)

## டி. பீக்கு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராஸா விளங்கினார் என்றும்—

அந்த ஆற்றல் இல்லாதவராக— தமது கட்சி எம். பிக்களால் புறக்கணிக்கப்பட்டவராக—ஜனாதிபதி விஜேதுங்கா இருக்கிறார் என்றும் கட்சியின் உத்தியோகபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்திருக்கிறது. [உ-எ-6]


நீர்வையம்பதி கந்தன்

# தேர்த் திருவிழா

ஏர் கொண்டோர் இலங்கி நிற்கும் நீர் வேலிப் பதியில்
சீர் கொண்ட திருத்தலமாய் விளங்கி நிற்கும் கந்தன்
கூர் கொண்ட வேலோடு தேரிவர்ந்து வந்து
குறைகளெல்லாம் போக்கிடுவான் அருள் மழை பொழிந்து.

கந்தன் கழல் போற்றி அவனருள் வேண்டி நிற்போர்

★ வினோ ★
நகைப் பூங்கா நிறுவனத்தினர்

அசல் 22 கரட் தங்க நகைகளை குறித்த தவணையில் செய்து பெற்றுக் கொள்ள என்றும் நாடவேண்டிய ஒரே இடம்

## வினோ நகைப் பூங்கா

185, சந்தோசம் தெரு;
(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: **சடாட்சரம் புவிச்சந்திரன்**

(வீனஸ் தங்க மாளிகை வினோ நகைப் பூங்கா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்,)

(30524)


**ஊரெழு கம்பன் கழகத்தினர்**

நடத்தும்

# கம்பன் விழா

இடம்: தமிழ்த்தாய் அரங்கம், ஊரெழு
(ஸ்ரீ வீரசக்தி விநாயகர் ஆலயத் திருவீதி)

நான்காம் நாள் (இறுதி நாள்) காலை நிகழ்ச்சிகள் மு.ப 9மணி

கம்பன் இசையமுது:- வைத்திய கலாநிதி திரு. கு. ஸ்ரீரடணகுமார்
தலைமையுரை:- திரு க சொக்கலிங்கம்
தொடக்கவுரை:- கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்

**ஐயம் தெளி அரங்கம்**

ஐயம் தெளிவிப்பவர்:- இலக்கண வித்தகர் இ. நமசிவாயதேசிகர்

மாலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 5மணி

மங்கள இசை;- திரு எஸ். சிதம்பரநாதன்
திரு. N. R. K. இரத்தினகுமார்
திரு. N. R. K. வாகீஸ்வரன்

கம்பன் இசையமுது:- திரு. M. ஸ்ரீரங்கநாதன்
தலைமையுரை:- திரு. திருநாவுக்கரசு
தொடக்கவுரை:- திரு. க வை. தனேஸ்வரன்
வாழ்த்துரை:- திரு இளஞ்செழியன் (வி. பு. மாணவர் அமைப்பு)
நிறைவுரை:- திரு. இ. மகேந்திரன் (அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி)

**மேன்முறையீட்டுப் பட்டி மண்டபம்**

முதல் நாள் பட்டிமண்டபத் தீர்ப்பினை எதிர்த்து மேன் முறையீடு

நடுவர்:- இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர்

வாதிடுவோர்:-
திரு. கி. நடராஜா
திரு. கே. கே. சோமசுந்தரம்
திரு. பொன். சோதிலிங்கன்
திரு. இ. ஜெயராஜ்

**கோல உரையாடல்** — இவர்கள் சந்தித்தால் .........

தலைவர்:- திரு. ஏ ரீ. பொன்னுத்துரை

கலந்து கொள்பவர்கள்:

திரு இ ஜெயராஜ் திரு. க. நாகேஸ்வரன், திரு ஆறு. திருமுருகன் B.A. திரு ச மணிமாறன், திரு. கஜரூபன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் M.A., திரு எ. எஸ். ஸ்ரீதயாளன் B.A. திரு இரா. செல்வவடிவேல், திரு. க. சிவகுமாரன், திரு. முருகையன் B.Sc. M.A., கலாநிதி காரை. சுந்தரம்பிள்ளை.

விழா சிறப்பு வாழ்த்துவோர்:

**லக்ஷ்மி பவான்**
புன்னாலைக்கட்டுவன்

**நியூ ஆரியபவான்**
கோண்டாவில்

[சி-7919]

## செல்வா நினைவாலயத்தை சுற்றிவர முட்புதர்கள்

### மலரஞ்சலிக்கு இடைஞ்சல்

யாழ்ப்பாணம், ஏப். 24

தந்தை செல்வாவின் பதினேழாவது நினைவு தினம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையாகும். அதனை யொட்டி தந்தை செல்வா நினைவாலயத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற உள்ளது.

துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சிவநெறிப்புரவலர் கலாநிதி கனகராசா ஆகியோர் தந்தை செல்வா நினைவாலயத்தில் மலரஞ்சலியை ஆரம்பித்து வைப்பர்.

இந்த நிகழ்வுக்கு இடைஞ்சல் விளைவிக்கும் வகையில் நினைவாலயச் சுற்றாடல் புதர் மண்டிக் கிடக்கிறது. எவரும் நடந்து செல்லமுடியாதவாறு மெலிஞ்சி முள் படர்ந்து வளர்ந்துள்ளது.

இப்பகுதியை துப்புரவு செய்வதில் மாநகர சபை நேற்று வரை அக்கறை காட்டாதது குறித்து தந்தை செல்வாவின் அபிமானி ஒருவர் கவலை தெரிவித்தார்.

தமிழர்கள் தங்கள் தலைவர்களை, பெரியார்களைப் பேரற்றி நினைவு கூருவது இந்த லட்சணத்தில்தான் என்றும் அவர் மனவேதனைப்பட்டார்.

தந்தை செல்வா நினைவாலயப் பகுதியை மாநகர சபை இன்றைக்கும் துப்புரவு செய்யாத பட்சத்தில்—

தந்தை செல்வாவின் அபிமானிகள் உழவாரப் பணி செய்து முட்புதரை வெட்டிச் சுத்திகரிப்புச் செய்வதற்கு உத்தேசித்துள்ளதாக அத்தொண்டில் ஈடுபடவிருப்பம் தெரிவித்துள்ளவர்களின் பேச்சாளர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (அ)

## சைவசித்தாந்த பேருரை மாநாடு

யாழ்ப்பாணம், ஏப். 24

மெய்கண்ட தேவர் ஆதீன 21 ஆவது ஆண்டு நிறைவும், ஸ்ரீமத் ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் நினைவு சைவசித்தாந்த பேருரை மாநாடும் நாளை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

நிகழ்ச்சியில் தேவாரம், படத்திரை நீக்கம், வாழ்த்துப்பா, அருளாசி, நிறைவுப் பேருரை, நினைவுப் பேருரை கவிதாஞ்சலி, சிறப்புரைகள், வெளியீட்டுரை ஆகியவை இடம் பெறும். [த]

### வடமத்திய..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபையில் உள்ள ஆளுங் கட்சியினரும் எதிரணியினரும் கூட்டாக ஜனாதிபதியை கோரவில்லை என்றும் அவர் கூறி [த-எ]


தேரேறி வீதியுலா வரும்

**அன்னை ஸ்ரீ காமாட்சி அம்பாள்**

(நாச்சிமார் கோவில்)

அருள்பெற வேண்டுகின்றோம்

# அம்பாள் இன்டஸ்றீ

605, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி.

(30588)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகேஸ்வரி அம்பலவாணர்

களபூமி, காரைநகரை பிறப்பிடமாகக் கொண்டவரும் இல 44/4, நல்லூர் செட்டித் தெரு ஒழுங்கையை வசிப்பிடமாக கொண்டவருமான திருமதி நாகேஸ்வரி அம்பலவாணர் நேற்றுக் காலமானார்.

இவர் ஆறுமுகம் அம்பலவாணர் (கணக்காளர்— த.பொ.மே. நிறுவனம்) அவர்களின் அன்பு மனைவியும் யாழ்ப்பாணம் பிரபலவர்த்தகர் எஸ்.வி. முருகேசுவினதும்—காலஞ்சென்ற இராசம்மாவினதும் அன்பு மகளும், காலஞ்சென்ற சட்டத்தரணி க. ஆறுமுகம் தம்பதிகளின் மருமகளும், தங்கராசா (லண்டன்), இராஜேஸ்வரி நடராசா, தங்கரத்தினம், பூமணி, குணரத்தினம், சதானந்தன் (லண்டன்), சிவானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்னம்மா (மலேசியா), மனோன்மணி, சரோஜினிதேவி, நாகேஸ்வரன் (இலங்கை வங்கி -யாழ் ), உமாதேவன், சரோஜினிதேவி (லண்டன்), பத்மராணி, இராசமலர், பத்மினி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
ஆ. அம்பலவாணர் (கணவர்)
எஸ். வி. முருகேசு (தகப்பன்)

44/4, நல்லூர் செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்,

(சி/7920)

### சிதம்பரப்பிள்ளை சோமசுந்தரம்

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை முத்தம்மா தம்பதிகளின் மகன் சோமசுந்தரம் அவர்கள் நேற்று சனிக்கிழமை 23-04-94 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் தங்கமணியின் அன்புக் கணவரும் இராமநாதன் இளையபிள்ளை தம்பதிகளின் மருமகனும், யோகேஸ்வரன், மகேஸ்வரன் [சுவிஸ்], ஈஸ்வரன் [சுவிஸ்], பரமேஸ்வரன் [சுவிஸ்], புவனேஸ்வரி, விக்னேஸ்வரி, சிவனேஸ்வரன் (உயர்தர மாணவன், வைத்தீஸ்வராக் கல்லூரி]. ஆகியோரின் அன்புத் தந்தையும், மங்கையர்க்கரசி, வனிதா [சுவிஸ்], தேன்மொழி [சுவிஸ்], வாசுதேவன் [சுவிஸ்] ஆகியோரின் அன்பு மாமனாரும். நாகலிங்கம், மகேஸ்வரி, பரமேஸ்வரி, திருஞானம், இலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஞானலெட்சுமி, முத்தையா, காலஞ்சென்ற செல்லரெட்ணம், மற்றும் சரஸ்வதி, காலஞ்சென்ற சோதிலிங்கம், பராசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், செந்தூரன், கேதீஸ்வரன், மிதுனேசன், நிரோஷன் [சுவிஸ்], பிரவீனா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:-
சோ. யோகேஸ்வரன் [மகன்]

162, A-V. றோட்,
அரியாலை.
யாழ்ப்பாணம்.

[30590]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 898/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24 - 04 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org